www.padippakam.com

# காதலும் கலியாணமும்



- திருவள்ளுவர்
- தாகூர்
- டால்ஸ்டாய்
- இங்கர்சால்
- காந்திஜி
- பாரதியார்
- திரு.வி.க.
- ராஜாஜி
- கல்கி

முல்லை பிஎல். முத்தையா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காதலும் கலியாணமும்

□ சான்றோர்களின் கருத்துக் குவியல் □

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

□

தொகுத்தவர் :

முல்லை பிஎல். முத்தையா

□

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600098

படிப்பகம்

KATHALUM KALIYANAMUM
by M[illegible]

முதல் பதிப்பு: 1957 (தமிழகம் வெளியீடு)
இரண்டாம் பதிப்பு: நவம்பர், 1991

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
[illegible]

Code No. A 561

விலை: ரூ. [illegible]

ISBN - 81 - 234 - 0024 - 1

அச்சிட்டோர்:
ஜன்[illegible]
161, பிரகாசம் சாலை[illegible]
சென்னை-600 108

www.padippakam.com

# பதிப்புரை

மக்கள் வாழ்க்கையில் காதலும் கலியாணமும் மிகவும் இன்றியமையாதவை. உலகம் முழுமைக்கும் பொது வானதாகும்.

அத்தகைய பெருமைக்கு உரியவற்றைப் பற்றி புகழ் வாய்ந்தவர்களின் கருத்து ஓவியங்களை அறிந்து கொள்வதில் அனைவரும் ஆவல் உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

பலருக்கும் பயன்தரும் வகையில் உன்னதமான அறிவுரைகளைச் சேகரித்து அளிக்கிறார் திரு. **முல்லை முத்தையா** அவர்கள்.

எங்களுடைய வெளியீடுகளைத் தொடர்ந்து ஆதரித்து வரும் வாசகர்கள் இந்த நூலையும் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

**பதிப்பகத்தார்**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# முதல் பதிப்பின் முன்னுரை

- காலத்திற்கேற்ப மக்களின் மனோநிலை மாறுவது இயல்பு. அத்தகைய மாறுதல் உலகிலுள்ள மக்கள் எல்லாருக்கும், எல்லாத் துறைகளிலும் ஏற்படும். அம்மாறுதல் பெரும்பாலும் முன்னேற்றத்தை நோக்கியே இருக்கும். சிந்திக்கும் திறமையற்றவர்களைத் தவிர, ஏனையோர் முன்னேற்றத்தையே விரும்புவர்.

- எல்லாத்துறைகளிலும் முற்போக்கான மாறுதல்களை மக்களுக்கு விளங்கச் சொல்லி பின்பற்றும்படி செய்யும் ஆற்றல் எல்லாருக்குமே இருப்பதில்லை. பொது நலம் ஒன்றையே முதன்மையாகக் கருதும் பெரியோர்களாலும், அறிஞர்களாலுமே அதைச் சாதிக்க முடியும்.

- நம் நாட்டிலேயும், பல பழக்க வழக்கங்களை மாறுதல் அடையா வண்ணம் கட்டிக்காப்பதில் பலர் பெருமை கொண்டுள்ளனர். அதில் குறிப்பாக காதல், கலியாணம், வாழ்க்கை முறைகளில் காலத்திற்கேற்ற மாறுதல்களைச் செய்து கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. அறியாமையே அதற்குக் காரணம்; வேறெதுவும் இல்லை. அத்தகையவர்களுக்குப் பயன்படும் முறையில், அறிஞர்கள் அவ்வப்போது கூறிய அறிவுரைகளைத் தொகுத்துத் தரவேண்டும் என்ற ஆர்வத்தால் உருவானதே இந்நூல்!

முல்லை பிஎல். முத்தையா

படிப்பகம்

www.padippakam.com

# நன்றியுரை

⊙ இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளவை எதெதிலிருந்து எடுக்கப் பெற்றவை என்ற விவரம் இங்கே காணலாம்.

அவற்றை இதில் இணைத்துக் கொள்ள அன்போடு அனுமதி வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கு இதயம் நிறைந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1. **காதலும் கலியாணமும் :** 'ராஜாஜி கட்டுரைகள்' என்ற நூல்

2. **மணமக்களுக்கு :** காந்தியடிகள் தம் பேத்தியின் திருமணத்தில் பேசியதின் சுருக்கம்.

3. **மனைவியின் லட்சியம் :** இரவீந்திரநாத் 'தாகூரின் கடிதங்கள்' த. நா சேனாபதி அவர்களின் தமிழாக்கம், கலைமகள் வெளியீடு.

4. **காதலின் புகழ் :** மகாகவி பாரதியார் கவிதைத் தொகுப்பு.

5. **திருமணம் :** தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்களின் 'பெண்ணின் பெருமை' என்ற நூல்

படிப்பகம்

www.padippakam.com

6. **வாழ்க்கைத் துணை :** திருக்குறள் அறத்துப்பால் பகுதி. முல்லை முத்தையாவின் 'திருக்குறள் அறிவுரைகள்' என்ற நூல்.

7. **வாழ்க்கை :** ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் கட்டுரைப் பகுதி. ஆசிரியர் ப. ரா. தமிழாக்கம்.

8. **மணமலர் :** அறிஞர் இங்கர்சால் கட்டுரைப் பகுதி வெ. சாமிநாத சர்மா அவர்கள் தமிழாக்கம்.

9. **கலியாணம் :** *1936*-ல் 'ஆனந்த விகடனில்' கல்கி அவர்கள் எழுதிய கட்டுரைச் சுருக்கம்.

**முல்லை பிஎல். முத்தையா**

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளுறை

பக்கம்

1. காதலும் கலியாணமும் .... 1
—ராஜாஜி

2. மணமக்களுக்கு ... 17
—காந்திஜி

3. மனைவியின் லட்சியம் .... 25
—தாகூர்

4. திருமணம் .... 31
—திரு. வி.க

5. காதலின் புகழ் .... 39
—பாரதியார்

6. வாழ்க்கைத் துணை ... 43
—திருவள்ளுவர்

7. மணமலர் ... 47
—இங்கர்சால்

8. வாழ்க்கை ... 55
—டால்ஸ்டாய்

9. கலியாணம் .... 61
—கல்கி

படிப்பகம்

www.padippakam.com

# காதலும் கல்யாணமும்

1

ராஜாஜி

A 561 - 1

படிப்பகம்

www.padippakam.com



# காதலும் கலியாணமும்

எழுத ஆரம்பிக்கும் போது

"வழுக்கைத் தலை. இருக்கும் நாலைந்து மயிரும் வெளுப்பு. உமக்கென்ன தெரியும் காதலைப்பற்றி? தயவு செய்து வேறு விஷயம் பேசும். பழைய அனுபவம் பேசப் போகிறீரா? போதும், போதும் நிறுத்தும்! காதல் என்ன கண்டீர்! கர்னாடகப் பேர்வழியைக் கேட்டு நாம் காற்றுக் கொள்ளவா?"

இவ்வாறெல்லாம் வாசகர்கள், அதிலும் பட்டணக்கரை வாலிபர்களும் யுவதிகளும் கேட்டுச் சிரிப்பது என் மனக் காதில் விழுகிறது. எவ்வாறாயினும், இன்று விவாகம், காதல் இவ்விஷயங்களைக் குறித்து வியாசம் எழுதி அனுப்பத் தீர்மானித்துவிட்டேன், நான். காதல் என்பது கடினமான விஷயம். விவாகம் என்பதை வைத்துக் கொண்டு காதலைப் பற்றி இளைஞர்களுடன் கொஞ்சம் பேசலாம் என்று எனக்கு உத்தேசம்.

ஆராய்ந்து பார்த்தால், நம் நாட்டில் சரியான காதல் விளைவதற்குத் தக்க பூமியே இல்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்நாளிலும் கூட, தினசரி வாழ்க்கையில் ஆண் பெண்கள் தாராளமாய்க் கலந்து பழகுவது நமக்குள் கிடையாது. என்ன சமாதானம் சொன்ன போதிலும்



படிப்பகம்

www.padippakam.com



இது உண்மையே. இது நல்லதா, கெடுதலா என்பது வேறு பிரச்னை.

இரண்டாவதாக, நம்முடைய சமூகத்தில் பிறந்த பெண்களுக்கெல்லாம் விவாகம் செய்தே ஆக வேண்டும். காதல் என்னும் நிபந்தனை வைத்துக் கொண்டால் இது முடியாத காரியமாகும். இது பெண்ணைப் பெற்றவர்களுக்கு எளிதில் விளங்கும்.

மூன்றாவதாக, இது எல்லா நாடுகளுக்கும் பொது. காதல் என்பது இருபாலார் இடத்தும் இருக்க வேண்டிய மனநிலை. ஒருத்தி பேரில் ஒருவன் காதல் கொள்கிறான். அதற்கு ஏற்றாற்போல் அவளுக்கு அவன் பேரில் காதல் உண்டாகவில்லை. காதலைத் தூண்டும் உருவமும், குணங்களும் செயல்களும் இருந்தால், இந்தப் பைத்தியக்காரப் போட்டி உலகத்தில் அந்த ஒருத்தியையோ அல்லது அந்த ஒருவனையோ பலபேர் காதலிக்க முந்துகிறார்கள். இதற்கு என்ன செய்வது? காமதேவன் நம்முடைய சௌகரியத்தை உத்தேசித்து, ஆண் பெண்களைத் தனித்தனி ஜோடிகளாகப் பிரித்துத் தன் பாணங்களைப் பிரயோகிப்பதில்லை. எல்லாரும், காதல் மணந்தான் செய்ய வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்திக் கொண்டோமானால் பல பேர் விவாகமில்லாமலே இருக்க நேரும்—ஆகையால் காதலித்துத் தான் கலியாணம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை முடியாத காரியம் என்பது விளங்கும்.

**மின்னலும் மழையும்**

இதனால் காதல் என்பது ஒரு கனவு; வாழ்க்கையில் நிறைவேற முடியாதது என்றல்ல. காதல் என்பது ஓர் உண்மையான வேகமே, சந்தேகமில்லை. சில சமயம் இரு பக்கமும் காதலுண்டாகி விவாகமும் முடிவுபெறுகிறது. சில சமயம் இரு பக்கமும் காதல் இல்லை தான். அதனாலேயே வாழ்க்கை காதலற்றுப்போக வேண்டியதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



விவாகம் செய்து கொண்ட தம்பதிகள் ஒருவரை ஒருவர் மதிக்கவும், நேசிக்கவும், கூட்டாளிகளாக வாழ்க்கை நடத்தவும் பயில வேணடும். காதலில், தாய், தகப்பனார் செய்வித்த மணம்—இது உப்பில்லாத சோறு—பிற நாடுகளில் எவ்வளவு காதல்—கதைக்ளில் படிக்கிறோம். சினிமாவில் பார்க்கிறோம்! அதுவல்லவோ, உண்மையான வாழ்வு என்று ஏக்கமடைந்து ஏமாற வேண்டாம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நம்முடைய நாட்டிலும் ஆண் பெண்கள் கூடி உயர்வும் நயமும் பொருந்திய வாழ்க்கை நடத்தலாம். மின்னலைக் காண்கிறோம். அது உண்மையான வேகம்; அழகான காட்சி ஆயினும், மின்னல் மின்னினால் தான் மழை என்ற நியதி கிடையாது. மின்னல் தானாக உண்டாகும்; உண்டானால் அழகுதான். ஆனால் மின்னல் இருப்பினும் இல்லையாயினும் மேகங்கள் கூடி மழை பெய்கின்றன அல்லவா! அப்படிப் பெய்வதால் தான் வாழ்வு.

**வியக்கத்தக்க தைரியம்**

வாலிபனே, ஓர் இளம் பெண் உனக்கு மனைவியாக வீட்டுக்கு வந்திருக்கிறாளல்லவா? அதைப்பற்றி நீ எப்போதாவது ஆழ்ந்து சிந்தித்ததுண்டா? சிறு வயதில் ஒரு பெண் தன் தாய் தகப்பனை விட்டுவிட்டு புதிய ஒரு குடும்பத்திற்கு எவ்வளவு தைரியமாக வருகிறாள்! அவள் எதை நம்பி, யாரை நம்பி இவ்வளவு தைரியமும், சந்தோஷமும் முக மலர்ச்சியும் கொண்டிருக்கிறாள்? மணம் புரிந்த ஒவ்வொரு வாலிபனும் இதைத் தனக்குள் யோசித்து வியப்புற வேண்டும். இதைப் போன்ற தைரியத்தையும் திட புத்தியையும் ஆண்களில் யாராவது காட்டியிருக்கிறீர்களா? காட்ட முடியுமா? மனைவியின் இந்த ஆத்ம சக்தியையும் தைரியத்தையும் கண்டு விட்டால், அவள் பால் தான் செய்ய வேண்டிய கடமையை ஒவ்வொரு வாலிபனும் உணரவே செய்வான். தன் உடலின்பத்திற்காக அடைந்த ஒரு கருவியாக அவளை நினைக்க மாட்டான். தனக்குக் கிடைத்த அரிய பெரிய



படிப்பகம்

www.padippakam.com



நட்புச் செல்வம் என்று அறிந்து நடந்து கொள்வான். தன்னை நேசிக்கும் ஆடவனான ஒரு சிநேகிதனிடம் நடந்து கொள்வது போல் கவனிப்பும், மதிப்பும் சிரத்தையும் காட்டி மனைவியிடம் நடந்து கொள்வான். தான் இட்டது சட்டம், என்று நினைக்க மாட்டான். தான் எஜமானன், அவள் ஊழியம் செய்பவள் என்று எண்ணமாட்டான்.

### தோழமைப் பயிற்சி

கேவலம், உடலின்பத்தையே லட்சியமாக எண்ணக் கூடாது. இதை அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள்; ஆனால் மறந்துவிடுகிறார்கள். பிரகிருதியில் அமைந்திருக்கும் இந்த உடல் மகிழ்ச்சியைத் தம்பதிகள் ஜாக்கிரதையாக ஆண்டு, அது தமக்குள் நட்பை வளர்க்க கடவுளால் படைக்கப்பட்ட ஓர் அருமையான கருவி என்று நினைவில் வைத்து நடந்து கொள்ள வேண்டும். உடலின்பத்தை தாழ் வென்றும் பாவமென்றும் கருத வேண்டாம். ஆனால் சேர்ந்து வாழ்வதன் பயனே அதுதான் என்று கருதுதல் கூடாது. அது நட்பை வளர்த்து ஒற்றுமையைப் பூரணமாக்குவதற்குரிய ஓர் அற்புதமான பிரகிருத சக்தி. அறிவுடையாருக்கும் அல்லாதா ருக்கும் உதவும் ஒரு மேன்மையான கருவி அது. சாதனம் என்பதை மறந்து அதுவே இன்பம் என்று எண்ணிவிடக் கூடாது. அவ்வாறு ஏமாந்தால் வாழ்க்கை முழுதும் துன்ப மாகவே முடியும்.

எவ்வளவோ காலத்திற்கு முன் நமது திருவள்ளுவர், மனைவிக்கு—'வாழ்க்கைத் துணை' என்று அருமையாகப் பெயரிட்டார். அப்பெயரின் முழுப்பொருள் தம்பதிகளின் வாழ்க்கையில் மலர்ந்து மணம் வீசச் செய்ய வேண்டும். புருஷனும் மனைவியும் தோழமை பயில வேண்டும். எவ் விஷயத்தையும் இருவரும் கலந்து பேசி முடிக்க வேண்டும் வீட்டு விஷயங்களில் மனைவியின் இஷ்டப்படி விட்டுவிடு தல், உலக விவகாரங்களில் புருஷன் இஷ்டப்படி நடத்தல்



படிப்பகம்

www.padippakam.com



என்று பங்கு போட்டுக் கொண்டு வாழ்க்கை நடத்துதல் கூடாது. கலந்து பேசிச் செய்வதில் பயிலப் பயிலக் கஷ்டம் தோன்றாது. இருவருடைய அறிவும் உணர்ச்சியும் சக்தியும் விசாலமடைந்து அன்பும் சுகமும் உண்டாகும். பலவிதப் பள்ளிக்கூடப் படிப்புக்களைக் காட்டிலும் இவ்வித வாழ்க்கைப் பயிற்சியில் தான் அதிகப்பயன்.

**காதல் ஒரு ஜுரமன்று : விவாகம் ஒரு மருந்தன்று**

காதல் கொண்டு கூடிய தம்பதிகளானால் மிகவும் சிரேஷ்டம். அதுபோக, கடவுள் படைத்த இருவர் 'நாம் சேர்ந்து அன்புடன் இல்லற வாழ்க்கை நடத்துவோம்' என்று காதலின் வேகமின்றிச் சாதாரணமாய்க் கூடினவர்களானாலும் சரி, அவ்வாறு வாழ்ந்து உலகத்தில் அன்பென்னும் செல்வத்தைப் பெருக்கலாம். காதல் என்பது ஒரு ஜுரமாகவும், விவாகம் என்பது அதற்கு ஒரு மருந்தாகவும் எண்ணக் கூடாது. அவ்வாறு கொண்டால், விவாகம் முடிந்ததும் ஜுரம் தணிந்து போகும். காதல் என்பது ஜுரம் அன்று. பூவின் மணம்போல அது ஓர் இயற்கை சக்தி, ஆறாத சக்தி. சிலசமயம் அது தானாகப் பொங்கும். இல்லாவிட்டால் மின்சார சக்தியைப் போல் நாம் உண்டாக்கி வளர்த்துக் கொள்ளலாம்.

காதல் என்பதும் மற்றப் பிரகிருதி சக்திகளைப் போல் ஆண்டவனுடைய சொரூபமேயாகும். அதை எந்தக் கோயிலிலும் ஆராதித்துத் தரிசிக்கலாம். ஆனால் பக்தி வேண்டும்; சிரத்தை வேண்டும். பக்தி இருந்தால் எந்தக் கோயிலிலும் ஈசுவரன் இருக்கிறான். உன் மனைவி, உனக்கென்று கட்டப்பட்ட காதல் தெய்வத்தின் கோயிலாவாள். நோன்பிருந்து வந்திருந்தாயானால், காதல் என்னும் பராசக்தியின் அவதாரத்தை அக்கோயிலில் தரிசிப்பாய் இல்லையானால், கல்லைத்தான் காண்பாய். அது கல்லின் குற்றமல்ல; உன் குற்றமே.



படிப்பகம்

www.padippakam.com



## காதலும் காத்தலும்

காதலை முதலிலே காண்பது பெரிதல்ல; கண்டோம் என்று நினைத்தவையெல்லாம் உண்மைக் காதலல்ல. தேகத்திலுள்ள பூதத்தொகுதிகள் தங்கள் அன்னகோச வேகத்தையெல்லாம் உயர்ந்த காதலாகக் காட்டிக் கொள்ளும். பகுத்தறிவுடன் பொய்யைத் தள்ளி, உண்மைக் காதலை ஒருவன் கண்டறிந்தாலும், விரும்பினவளிடம் அதற்கொத்த காதல் உண்டாகமலிருப்பதையும் காண்கிறோம். இருபக்கமும் இயல்பாகவும் பலாத்காரமற்றதாகவும் காதல் உண்டானலல்லவோ அது வாழ்வைத் தாங்கும் மேடையாகும்? இந்தப் பெரும்பேறு அனைவரும் பெறுதலரிது. ஆனால், தன் பாய்ச்சலில்லாத வயல்களையெல்லாம் தண்ணீர் பாயவில்லை என்று விட்டுவிட முடியுமா? கிணறு வெட்டியோ வானத்தை வேண்டியோ சாகுபடி செய்கிறோம். இவ்வாறு பயிர் செய்து, இனிய காய், கனி, கிழங்குகளும், மணமும் அழகும் கொண்ட பூக்களும் உண்டாக்கலாம். ஆனால் சோம்பலின்றி மனத்தைச் செலுத்தி பக்தியுடன் பயிர் செய்ய வேண்டும். உண்மைக் காதல் ஏற்படுதல் அரிது தான்; கண்டாலும் அதற்கு இணையாகப் பிரதி காதல் பெறுவது அதனினும் அரிது. இரண்டும் பெற்றாலும் அக்காதலைக் காப்பது எல்லாவற்றிலும் அரிது. ஏற்பட்ட காதலைக் காத்தலும், அது போகச் சர்வ வியாபகமாய் மறைந்து கிடக்கும் அவ்யக்த காதற் செல்வத்தை வெளிப்படுத்தி வளர்த்து வாழ்க்கைத் துணையாக மனைவியை ஆக்கிக் கொள்ளப் பயில்வதுமே இளைஞனுடைய தர்மம். இதற்குப் பகவானுடைய அருள் வேண்டும்; நாமும் பாடுபட வேண்டும்.

காதல் என்பது சாதல். நான் என்பது சாக வேண்டும். காதல் இன்றேல் சாதல் என்று பாரதியாருடைய குயில் பாடிற்று. ஆனால் சாதல் இல்லையேல் காதல் இல்லை என்பதே மந்திரம்.



படிப்பகம்

www.padippakam.com



## ஏற்றிய விளக்கைக் காக்க வேண்டும்

"விவாகத்துடன் காரியம் முடிந்தது என்று எண்ணுவது அறியாமையாகும்.

காதல் மணமாயினும் சரி, சம்பிரதாய மணமாயினும் சரி, யுத்தம் பின்னால் தான். அதில் வென்றாலொழிய வெற்றியில்லை, சுகமுமில்லை.

மணம் செய்த பின்தான் குருக்ஷேத்திரம், வாழ்க்கை முழுதும் ஒரு யுத்தகளம்! மனத்தூய்மைக்குப் பல சோதனைகள் நேரிடும். தெருவிலும், வண்டிகளிலும், பலர் கூடி விருந்து கொள்ளும் போதும் காதலுக்குத் தக்க உயர்ந்த பாத்திரங்கள் போல் முகங்களும் குணங்களும் பல தோன்றும். கொண்ட மனைவியைத் தாழ்த்தும் பல எண்ணங்களும் தோன்றும். அவைகளைக் கவசம் பூண்டு எதிர்த்து வெல்ல வேண்டும்.

உண்மையில், பூதத் தொகுதிகள் அனைத்தும் ஒன்று. அதில் ஆண் குலம் முழுதும் ஒன்று; பெண் குலம் முழுதும் ஒன்று. இரண்டும் அத்வைதமாக ஒன்று கூட இடைவிடாமல் பொங்குகிறது. அதுவே காதல் சக்தி. ஆனால் இந்தச் சக்திக்கு வரம்பு மீறி இடம் கொடுத்தோமானால் அனைத்தும் ஒன்றாக வெந்து சாம்பலாகி விடும். அவ்வளவு நெருப்பைத் தாங்க முடியாத நமக்குத் தனி அடுப்பும் தனி விளக்குந்தான் வாழ்க்கை. ஆகையால் அடுப்பை மூட்டி விளக்கை ஏற்றி அதைக் காத்து வாழ்வோமாக!

## தேனீயின் காதல்

காக்லின் பூரண விளக்கத்தைத் தேனீக்கள் வாழ்க்கையில் காணலாம். தேனீக்களின் வாழ்க்கையில் பல அற்புதங்கள்; அவைகளில் பேராச்சிரியத்தைத் தருவது, அவற்றின் காதல் முறை தான். தனி உயிர் என்ன பயனுக்கென்பதும், காதல் என்ற பிரகிருதி மகிழ்ச்சி என்ன பயனுக்



படிப்பகம்

www.padippakam.com



கென்பதும், இந்தச் சிறு பிராணிகள் அறிந்திருப்பதாகவே தோன்றுகிறது. பருவமடைந்தவுடன் பெண் ஈ கூண்டை விட்டு வெளியே பறக்கும். பின்னே ஆண் ஈக்கள் தொடர்ந்து செல்லும். பறந்து பறந்து வென்ற ஒன்றின் காதலைக் குமரி ஒப்புக் கொள்ளும். இந்தக் காதலுக்கு ஆண் ஈ கொடுக்கும் விலை என்னவென்று எண்ணுகிறீர்கள்? தன் உயிரையே காதலிக்குத் தத்தம் செய்து விடுகிறது! ஆணும் பெண்ணும் கலந்து மகிழ்ந்ததும் மணவாளனுடைய உயிரையே பெண் ஈ கவர்ந்து தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டு போய் விடுகிறது. பெண் ஈ கூண்டுக்குத் திரும்பிப் போய்த் தன் ஆயுள் முழுதும் முட்டைகள் இடும். ஆயுளுக்கு ஒரே ஒரு தடவை தான் தேனீக்குக் காதலும் சேர்க்கையும்! அந்த ஒரு சேர்க்கையின் பயனாக ஆண் ஈ இறந்து போகிறது பெண் ஈக்கு மறுபடி எந்த ஆணுடனும் சேர்க்கை கிடையாது. ஆயிரக்கணக்கான முட்டைகளிட்டுத் தன் குலத்தின் நல னுக்கு வேண்டியவாறு இஷ்டம் போல், ஆண்களையோ, பெண்களையோ அல்லது இரண்டுமில்லாத சுத்தக் கன்னித் தொண்டர் கூட்டத்தையோ உண்டாக்கிக் கொள்ளும்.

காதல், இறப்பு, பிறப்பு என்பனவற்றின் பொருளும் பயனும் பரஸ்பர சம்பந்தமும் இந்தத் தேனீக்களின் வாழ்க்கைச் சரித்திரத்தினால் ஒருவாறு நாம் அறியக்கூடும். காதல் என்பது இனவளர்ச்சியைத் தூண்டும் பிரகிருதி சக்தியின் உருவம். அது உயிருள்ள உலகம் முழுதும் பரந்து கிடக்கிறது. உயிரற்றதென்று நாம் எண்ணும் ஜட அணுக் களுங் கூடக் காதல் வேகத்துடன் மணந்துதான் பிரகிருதி நடைபெறுகிறது. இறப்பென்பது துக்கமோ நாசமோ துயரப்பட வேண்டிய விஷயமோ அன்று. இறப்பு என்பது பிறப்பே. ஓர் ஆண் ஈயின் உயிர் பல்லாயிரம் ஈ சமூகத் திற்கு உயிர் தந்து அவற்றிலேயே மறைந்து விடுகிறது. அதைத்தான் இறப்பென்கிறோம். பரிபூரண தியாகத் திற்குச் சித்தமில்லாதவர்கள் மண வாழ்க்கையில் பூரண இன்பம் காணமாட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



## விவாகமும் விவேகமும்

இந்த ஆகாயச் சித்திரம் இருக்கட்டும். நடைமுறையில் பயனுள்ள விஷயம் ஏதும் இல்லையா? எவ்வளவோ சிக்கலான கேள்விகள் கிடக்க வெறும் மனச் சஞ்சாரம் பண்ணுகிறீரே என்று வாசகர்கள் நினைக்கலாம். பயனற்ற சித்திரப் பேச்சுக்கள் நான் பேசவில்லை. வாழ்க்கையில் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் பல கேள்விகள் எழுகின்றன. அவற்றிற்கு அந்தந்த சந்தர்ப்பத்தை ஒட்டித் தனித் தனிப் பதில் சொல்ல வேண்டியதே தவிர ஒரே பதிலாய்ச் சொல்வது பயனற்றது. உதாரணம் எந்த வயதில் விவாகம் செய்ய வேண்டியது? இதற்கு விடையாக எந்த வயதைக் குறிப்பிட்டாலும், சில குடும்பங்களுக்கு, சில பேர்வழிகளுக்கு அது சரியானதாகாது. ஒரு விவாகத்திற்கு யார் சம்மதம் வேண்டும்? தாயார் தகப்பனார் பந்துக்களா, சமூகமா அல்லது பெண்ணா, யார் சம்மதத்தால் முடிக்க வேண்டும்? இதுவும் ஒரு விடைக்குள் அடங்காத விஷயம். ஒரு நிலைமையைப் போல் மற்றொரு நிலைமை இராது; சாதிக் கலப்பு மணம் செய்யலாமா, கூடாதா? சில சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டியது, வேறு சில சமயங்களில் கூடாது. அடிப்படையான தத்துவத்தை அறிந்து இல்லற வாழ்க்கையின் பொருளும் பயனும் சரியாக உணர்ந்தோமானால், கிளம்பும் பல கேள்விகளுக்கு விடைகள் தாமாகவே வரும். இது தான் சரியான முறை. இப்படிச் செய்; அப்படிச் செய்; என்று பல புத்திமதிகள் சொல்லப் புகுந்தால் ஒவ்வொன்றுக்கும் பல ஆக்ஷேபணைகள் கிளம்பும். எதையும் எதிர்ப்பதே கல்வி கற்ற மனிதனது மூளையின் சுபாவம். தாமாக யோசித்துத் தனி விஷயங்களைத் தீர்த்துக்கொள்ள விட்டு விடுவது தான் நலம். ஆயினும், இவ்வளவு தூரம் சொல்லிய பிறகு, சில கேள்விகளுக்காவது என் அபிப்ராயத்தை எழுத வேண்டுமென்று எண்ணுகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com



**கலப்பு மணம்**

வயது வந்த இருவர் தீவிர உணர்ச்சியுடன் புருஷன் மனைவியாக வாழ வேண்டுமென்று ஆசைப்பட்டால், பெற்றோர்களே! 'குலம்' 'பணம்' 'வழக்கம்' முதலிய காரணங்களைக் கொண்டு தடை செய்யாதீர்கள். உண்மைக் காதலைத் தடுத்தால் மன நிலை தேகாரோக்கியம் இரண்டும் கெட்டுவிடும். பெற்றோர்களாகிய நீங்கள் விரும்புவது, உங்கள் மக்களின் சந்தோஷம். அதை உத்தேசித்தால் காதலைத் தடுக்கக் கூடாது. உங்கள் கடமை என்னவென்றால், கஷ்டங்களையும், தடைகளையும் சரியாய் எடுத்துக் காட்டுவதும், அவர்கள் உணர்ச்சியை சோதித்துப் பார்ப்பதும், அவர்கள் புத்தியை விசாலப்படுத்துவதுமேயாகும். இவ்வெல்லாப் பரீக்ஷைகளிலும் தேர்ந்தார்களானால், அதன்மேல் அவர்களுக்கே விட்டுவிடுங்கள். தெய்வம் உண்டு; மக்களின் க்ஷேமத்திற்கு நீங்களே சாசுவத காவல் என்று எண்ணாதீர்கள்.

தவிர, நன்றாய்ப் பழகித் தெரிந்து இரு பக்கத்திலும் சம்மதம் கண்டு வெவ்வேறு சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மணம் புரிவது நாட்டிற்கு நன்மையே பயக்கும். ஏற்றத் தாழ்வு புகுத்தாத தொழில் வரம்புகளை நான் ஆட்சேபிக்கவில்லை. சிறு வயதிலேயே பழகி கற்கவேண்டிய தொழில் வரம்புகளுக்குச் சம்பந்தப் படாத சாதிப் பிரிவினைகளை ஒழிப்பது அத்தியாவசியம். சமயவேறுபாடுகளை உத்தேசித்தும் சில பிரிவுகள் உண்டாயின. அச்சமய வேறுபாடுகள் முற்றிலும் மறந்து போய், வெறும் உடுப்புகள், ஆசாரங்கள், முகத்திலிடும் குறிகள் முதலியன மட்டும் வேறுபட்டு, வீண் பிரிவினைகளும் சமூகத் துவேஷங்களும் எஞ்சி நிற்கின்றன. இவற்றையெல்லாம் ஒழிப்பதற்கு, விவாகத் தடைகளை வர வர ஒழிக்க வேண்டும். சாதியை ஒட்டி நிற்கும் பிரத்யேக உணர்ச்சி போக வேண்டும். 'நம்மவர், நம்மவர்' என்ற



படிப்பகம்

www.padippakam.com



மோகம் தீர வேண்டும். இல்லாவிடில் பாரத சாதிக்கு விடுதலையில்லை.

**நிதானித்து நடக்க**

வாலிபர்களே! வழக்கம், சமூக வாழ்க்கை என்பனவெல்லாம் பொய்யல்ல. இலேசாகத் தள்ளி விடக் கூடிய விஷயங்களல்ல. தலைமுறை தலைமுறையாகத் தோன்றிய மனோபாவங்கள், பேசி வந்த மொழிகள், வழங்கி வந்த வழக்கங்கள், செய்து வந்த காரியங்கள் இவற்றில் திரண்ட உரு வந்தான் நாம். காதல் வேகத்தினால் இதை நாம் மறந்து விடக்கூடாது. மறந்தோமானால் அபாயம். பம்பரம் சுழலும் வரையில் நின்று கொண்டிருக்கும். சுழல்வது நின்றதும் பழையபடி தலைகீழாக விழுந்து தரையில் உருளும். ஆகையால் குலத்தையும் மதத்தையும் பாஷையையும் பழக்க வழக்கங்களையும் விட்டு வெகு தூரம் ஓடி அலையாதீர்கள். அதனால் துயரங்கள் விளையும்; உண்மைச் சுகங்கள் கிடையாமற் போய்விடும்.

ஒவ்வொரு வேகத்தையும் உண்மையான காதல் வேகம் என்று மோகங் கொள்ளாதீர்கள். உண்மையான காதல் வேகம் திடீரென்று தோன்றாது. அப்படித் தோன்றுவது, கேவலம் உடல் வேகந்தான். உள்ளத்தில் உண்டாகும் உடலுணர்ச்சியெல்லாம் யாரோ எழுதிய கதைப் புத்தகங்களில் படித்த 'காதல்' என்று எண்ணாதீர்கள். அடக்கிப் பார்த்து, மறந்து பார்த்து, மாற்றிப் பார்த்து, பிறகு தான் தீர்மானிக்க வேண்டும்.

காதலுக்கு ஒத்த பிரதிகாதல் பெறாத வேகத்தை உடனே அடக்கி மறந்து விடவேண்டும். வழக்கத்திற்கு மாறான மணங்கள், வாழ்க்கையில் நற்பயன் பெறவேண்டுமானால் இருபக்கத்திலும் ஒத்த காதல் வேகம் மிகவும் அவசியம். வெறும் 'சம்மதம்' போதாது. இரண்டு உயிர்களும் ஒன்றிக் கலந்தாலொழிய உண்மையான காதல்-மணம்



படிப்பகம்

www.padippakam.com



ஆகாது. நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சம்பவங்களில் உண்டாகும் வேகம் உண்மையான காதல் அல்ல; நிலையில்லாத பிரமை தான். அதன் தூண்டுதலைவிட, நிதான யோசனையும், பெரியோர் சொல்லும் விவேகமுமே மேலானவை.

**எச்சரிக்கை**

சாதிக்குள் அடங்கிய மணமானாலும், கலப்பு மணமானாலும், நன்கு தெரிந்த குலம், குடும்பம் இவற்றில் இருவர் மனமொத்து மணம் செய்து கொண்டால்தான் சந்தோஷமாக இல் வாழ்க்கையை நடத்த முடியும். முன்பின் நன்றாக அறியாத இடங்களில் தோன்றும் உருவத்தின் அழகும், அறிவின் பிரகாசமும் உணர்ச்சி வேகங்களும் பிந்தி மாறி விடும். இது பலபேருடைய அனுபவம்.

உலகத்தின் சீர்திருத்தத்திற்கென்றாவது பாரத சாதியின் முன்னேற்றத்திற்கென்றாவது மணம் செய்ய யோசிப்பதோ அல்லது செய்யப்போவதை நிராகரிப்பதோ நன்மை தராது. விவாகம் என்பது தனி யொருவனையும் ஒருத்தியையுமே அதிகமாகப் பொருத்தது. சமூகத்தின் நன்மைக்காக நாம் மணம் புரிவோமென்பது வீணான ஆகாயக் கோட்டை.

**வயதும் சம்மதமும்**

நம்முடைய நாட்டில் ஆணுக்கு இருபத்திரண்டு முதல் முப்பது வயதுக்குள்ளும், பெண்ணுக்குப் பதினெட்டு முதல் இருபத்தைந்துக்குள்ளும் இளவயதிலேயே விவாகம் முடித்தல் நலம் என்பது என் அபிப்பிராயம். இதில் பிறநாடுகளை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. மேற்குறித்த வயதில் இருபாலாருக்கும் சுதந்திர புத்தியிருக்கும். பதினெட்டு வயதுக்கு முந்திய பெண் குழந்தைகளுக்கு விவாகம் முடிப்பது அவர்களுடைய தேகாரோக்கியத்தை என்றென்றைக்கும் கெடுப்பதாகும். வழக்கம் என்று சொல்லி, பெற்ற குழந்தைகளைப் பலி கொடுக்காதீர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



தாய் தகப்பன்மார் ஆலோசனை வெகு முக்கியமானது. ஆனால் இன்றியமையாதது. வதூவரர்களுடைய சம்மதம் காதல் உற்சாகம் வேறு, சம்மதம் வேறு. காதல் உற்சாகம் இல்லையாயின், தாய் தகப்பன்மார்களின் யோசனை தான் மிகவும் அவசியம். பெற்றோர்கள் எடுத்த ஓர் உத்தேசத் திற்குப் பெண்ணின் சம்மதமோ அல்லது மகனுடைய சம்மதமோ இல்லையாயின், அந்த உத்தேசத்தை விடுவது நலம். பலாத்காரம் உபயோகித்தலும் கூடாது; அதற்கு உடன் படுதலும் கூடாது.

**சாஸ்திரம்**

நம்மைப் போல் பழைய வழக்கங்களையும் சாஸ்திரங் களையும் கௌரவிப்பவர்கள் உலகத்தில் வேறு யாருமில்லை. இது மிகவும் சரியே. ஆனால் உண்மையில் நம்முடைய சாஸ்திரங்கள் நமக்குக் கொடுக்கும் சுதந்திரத்தைப் போல் வேறு எந்த மதமும் கொடுக்கவில்லை. இதற்குப் பிரமாணம் மகாபாரதம் ஒன்று போதும். இதில் நடந்த திரௌபதி விவாகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அக்காலத்தில் அனை வரும் அந்த விவாகத்தை மிகவும் தவறென்று கருதினார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் பெரியோர்கள் கூடி, சந்தர்ப்பத்தை உத்தேசித்துத் தீர்ப்புச் சொன்னார்கள். ஆகாத காரியம் என்று முதலில் தோன்றியதைத் தருமத் துக்கு இயைந்தது என்று எவ்வளவு தைரியமாக முடிவு கூறி னார்கள்! விவாகத்திற்குச் செய்யும் சடங்குகளையே மாற்றி ஒரு கன்னிகைக்கும் ஐந்து புருஷர்களுக்கும் அமைய முடித்து விட்டார்கள். புராணங்களில் இதைப் போல் பல சம்பவங் களைக் காணலாம். சந்தர்ப்பத்தை ஒட்டியும் காலத்தின் மாறுதல்களைக் கருதியும், விதிகளை மாற்றவும் வழக்கங் களைப் புறக்கணிக்கவும் பூரண சுதந்திரம் நம்முடைய சாஸ் திரங்களில் கொடுத்திருக்கிறது. அநேகத் துறைகளில் நாம் சர்வ சாதாரணமாய் இந்தச் சுதந்திரத்தை உபயோகித்து வருகிறோம். எல்லாத் தருமங்களுக்கும் மேலான சக்தி



படிப்பகம்

www.padippakam.com



கொண்டது தூய்மையான காதல். அதைத் தடுத்தும், எதிர்த்தும் இல்லறம் நடத்துவது தருமமாகாது.

## செல்வ நிலை

தரித்திரம், பணக் கஷ்டம் இவற்றை அதிகமாய்ப் பொருட்படுத்தல் கூடாது. வறுமைப் பிசாசைக் கண்டு பயப்பட வேண்டாம். தனித்தனியாகப் படும் கஷ்டத்தை அன்புடன் கூடி வாழும் இருவர் ஒன்று சேர்ந்து சமாளித்தல் எளிதாகும். இருவரும் பங்கு போட்டுக் கொண்டு சிரித்து விட்டால் எல்லாக் கஷ்டங்களும் கரைந்து போகும். காதலின் அழகு வறுமையில் அதிகமாகவே பிரகாசிக்கும். தைரியமும் உண்மையான உள்ளக் கலப்பும் இருந்தால் வறுமையைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.

## முடிவுரை

நான் சொன்ன பேச்சுக்களை மேலெழுந்தவாரியாகப் படித்தால் சில விடங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகத் தோன்றும். உண்மையில் அவ்வாறில்லை. ஒரு முக்கியமான விஷயத்தின் எல்லா அம்சங்களையும் யோசித்துப் பல சந்தர்ப்பங்களுக்கும் பொருந்தும்படி முடிவு காண வேண்டுமானால் இப்படித் தான் சொல்லக் கூடும். யுவர்களும், பெற்றோர்களும், வைதிகப்பற்றுள்ளவர்களும், சீர்திருத்தக்காரர்களும், நான் வெளியிட்டிருக்கும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

□



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# மணமக்களுக்கு

2

NORWAY ... BOOKS
SIGNATURE

## காந்திஜி

A 561-2

படிப்பகம்

www.padippakam.com

# மணமக்களுக்கு

சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பதும் கடமை உணர்ச்சியைத் தட்டி எழுப்புகிற அளவிற்கே அவற்றை நான் நம்புகிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். சுயமாகச் சிந்தனை செய்யத் தொடங்கிய கால முதற் கொண்டு இந்த விதமான மன நிலை எனக்கு உண்டு. நீங்கள் கூறிய உறுதிமொழிகளும் மந்திரங்களும் சம்ஸ்கிருத மொழி யில் இருந்தன. அவற்றை உங்களுக்கு மொழி பெயர்த்துச் சொன்னார்கள். சம்ஸ்கிருதச் சொற்களுக்கு ஒரு வித சக்தி உண்டு; அந்தச் சொற்களைக் கேட்கக் கேட்க, அவற்றில் நமக்கு ஒருவித ஆர்வம் உண்டாகும் என்பதை நான் அறி வேன். அதனால் தான் வாசகத்தை சமஸ்கிருதத்தில் வைத்துக் கொண்டோம்.

நல்ல திடகாத்திரமான புத்திரனுக்குத் தாயாக மணப் பெண் விளங்க வேண்டுமென்பது, தனது விருப்பங்களில் ஒன்று என்பதாக, சடங்குகள் நடந்து கொண்டிருந்தபோது மணமகன் சொன்னார். இந்த விருப்பத்தைக் கேட்டு நான் திகில் அடையவில்லை. வம்ஸ விருத்தி கட்டாயம் என்பது இதன் பொருளல்ல; பிள்ளை வேண்டும் என்ற எண்ணமிருப் பின், திருமணத்தை மத உணர்ச்சியோடு நடத்த வேண்டுவது மிகமிக அவசியமாகும் என்பதே அதன் பொருள். குழந்தையை விரும்பாதவர்கள் மணமே செய்து கொள்ள



படிப்பகம்

www.padippakam.com



வேண்டியதில்லை. காம உணர்ச்சியைத் தணித்துக்கொள்ளும் பொருட்டுச் செய்துகொள்ளுகிற மணம், மணமன்று. அதை வியபிசாரம் என்றே சொல்லவேண்டும். சதிபதிகள் இருவருக்கும் குழந்தை வேண்டுமென்ற விருப்பம் இருப்பினல்லது, கலவி செய்யக் கூடாது என்பதே இன்று நடந்த சடங்கின் பொருளாகும். இது முழுதுமே ஒரு புனிதமான விஷயம். எனவே, கலவி என்பது தியானத்தோடு கூடியதாய் இருத்தல் வேண்டும். காம இன்பத்தையும் உணர்ச்சியையும் கிளறிவிடத் தக்க முறையில், வழக்கம்போல் சரஸ சல்லாபம் செய்து, கூடுவதாய் இருத்தல் கூடாது. ஒரு பிள்ளையைத் தவிர வேறு பிள்ளை வேண்டாமென்று எண்ணினால், வாழ்க்கையில் ஒரேயொருமுறை மட்டுமே கலவி செய்ய இடமுண்டு. ஆகவே, சீலமும் நல்ல உடல் நிலையும் இல்லாதவர்கள் கலவி செய்வதற்கே அதிகாரமில்லை. அவர்கள் செய்வார்களாயின் அதை வியபிசாரம் என்றே சொல்ல வேண்டும். மிருக இச்சையைத் தணித்துக் கொள்ளும் பொருட்டு மணம் ஏற்பட்டுள்ளதாக யாரேனும் உங்களுக்குச் சொல்லியிருந்தால், அதை நீங்கள் உடனே மறந்துவிடுங்கள். இந்த எண்ணம் மூட நம்பிக்கையாகும். புனிதமான அக்கினியின் முன்பாக சடங்குகள் யாவும் நடந்தேறுகின்றன. உங்களிடம் இருக்கும் காம உணர்ச்சிகளை எல்லாம் இந்த அக்கினியானது சாம்பலாக்கி விடட்டும்.

இந்தக் காலத்தில் அதிகமாய்ப் பரவிக்கிடக்கும் இன்னொரு மூடநம்பிக்கையையும் நீங்கள் விட்டுவிட வேண்டும். பிரமசரிய வாழ்க்கையும் புலனடக்கமும் தீங்கு பயக்குமென்றும் கட்டுப்பாடின்றிக் காம இச்சையைத் தணித்துக் கொள்வதும், கட்டுப்பாடின்றிக் காதல் புரிவதும் மிக மிக இயற்கையான காரியங்கள் என்றும் சொல்லி வருகிறார்கள். இதைவிடக் கேடுபயக்கும் மூடநம்பிக்கை வேறு கிடையவே கிடையாது. புலனடக்கத்தைக் கைக்கொள்வதற்கு உங்களுக்குப் போதிய திறன் இல்லாதிருக்கலாம்; அதன் காரணமாக



படிப்பகம்

www.padippakam.com



இலட்சியத்தை அடைவது சாத்தியமில்லாதும் போய்விடலாம். அதற்காக நீங்கள் உங்கள் இலட்சியத்தையே தாழ்த்திக்கொண்டு விடக் கூடாது. மதத்திற்குப் புறம்பான காரியங்களை மதம் என்று கருதக் கூடாது. தவறிவிடுவோம் என்ற எண்ணம் வருகிற சந்தர்ப்பங்களில் நான் சொல்லியதை நினைவு கூருங்கள். புனிதமான இந்தச் சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்தால் உங்களுக்குப் புலனடக்கமும் உறுதியும் ஏற்படும். காம இச்சையிலிருந்து விடுபட்டு மேல்நோக்கிச் செல்லும் கட்டுப்பாட்டுடன் வாழ்க்கை நடத்துவதுமே மண வாழ்க்கையின் அடிப்படையான நோக்கங்களாகும். இவையின்றி வேறு இலட்சியங்களுக்காகத் திருமணம் நடைபெறுமாயின் அது ஒரு புனிதமற்ற சடங்காகி விடுகிறது.

இப்போது இந்தத் திருமணத்தினால் நீங்கள் பிணைக்கப்படுகிறீர்கள். உற்ற நண்பர்கள் என்ற முறையிலும் சம அந்தஸ்து உடையவர்கள் என்ற முறையிலும் கணவனை ஸ்வாமி (எஜமான்) என்ற அழைத்தால் மனைவியை ஸ்வாமினி (எஜமானி) என்றும் அழைக்கிறோம். ஒருவருக்கொருவர் எஜமானராகவும், கூட்டாளிபாகவும் இருந்து, வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய காரியங்களையும் கடமைகளையும் நிறைவேற்றி வைக்க ஒத்துழைக்க வேண்டும். இளைஞர்களே! மணப் பெண்களைக் காட்டிலும் சிறந்த அறிவும் உணர்ச்சியும் உங்களுக்கு இருக்குமாயின், அவற்றை அவர்களுக்கு ஊட்டுங்கள்; உண்மையான ஆசிரியர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்து அவர்களுக்கு உதவுங்கள்; வழிகாட்டுங்கள்; தடைப்படுத்தாதீர்கள்; தப்பான வழிகளில் சொல்லாதீர்கள். எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்திலுமே, உங்களிடையே பரிபூர்ணமான ஒற்றுமை நிலவட்டும். இரகசிய மென்ற பேச்சே வேண்டாம். ஈருடலும் ஒருயிருமாக விளங்குவீர்களாக.

''போலிகளாய் இராதீர்கள். இயலாத காரியங்களைச் சாதிக்க வீணே முயன்று, உடல் நலத்தைக் கெடுத்துக்



படிப்பகம்

www.padippakam.com



கொள்ளாதீர்கள். கட்டுப்பாடு, ஒருவனது உடல் நலத்தைக் கெடுக்கவே மாட்டாது. வெளிப்படையான உடல் நலம் குன்றுகிறதேயன்றி, மன அடக்கத்தினால் உடல் நலம் கெடுவதில்லை. உண்மையான தன்னடக்கமுள்ளவனுக்குத் தினந்தோறும் பலன் அதிகரித்துக் கொண்டே போகும்; மன அமைதியும் வளர்ந்து கொண்டே வரும். மனதை அங்குமிங் கும் அலையவிடாமல் எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது தான் தன்னடக்கத்திற்கு முதற்படியாய் இருப்பது. உங்க ளுக்கு இருக்கும் ஆற்றலின் அளவை அறிந்து கொள்ளுங்கள். எவ்வளவு உங்களால் இயலுமோ அவ்வளவுக்கு எதிலும் ஈடுபடுங்கள். இலட்சியம் எது என்பதை சரியான முறையில் உங்களுக்குச் சொல்லி விட்டேன். நேர்மையாகவே நடந்து கொள்ள, கூடுமானவரை முயலுங்கள். தவறிவிட்டால், அதற் காக வருத்தமோ, வெட்கமோ படவேண்டாம். பூணூல் அணிந்து கொள்வது எப்படி ஒரு புனிதமான சடங்கோ, அதை எப்படி ஒரு புதிய பிறப்பு என்று சொல்லுகிறோமோ அதேபோலத் திருமணம் ஒரு புனிதமான சடங்குதான்; புதிய பிறப்புதான் என்பதை உங்களுக்கு எளிய முறையில் விளக்கிச் சொன்னேன். நான் சொன்ன விஷயங்களைக் கேட்டுத் திகிலோ, சோர்வோ கொள்ள வேண்டாம். எண் ணம், சொல், செயல் ஆகிய மூன்றுக்குமிடையில் எப்போ துமே பரிபூர்ணமான தொடர்பு இருக்கட்டும். எப்போதுமே எண்ணத்தைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். மற்றவை யாவும் தாமே சரிப்பட்டுவிடும். எண்ணத்தைவிட வன்மை பொருந்தியது வேறெதுமில்லை. செயல் சொல்லைப் பின்பற்றியும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மகா பலம் பொருந்திய எண்ணத்தினாலேயே உலகம் இயங்குகிறது. எண்ணம் என்பது பரிசுத்தமாயும் பலம் பொருந்தியதாயும் இருக்குமானால், அதனால் ஏற்படும் பலன்களும் எப்போ துமே பரிசுத்தமானவையாகவும் பலம் பொருந்தியவையாயும் இருக்கும். உன்னதமான இந்த இலட்சியத்தையே ஆயுத மாகக் கொண்டு, நீங்கள் வெளிக்கிளம்புங்கள். எந்த வித



படிப்பகம்

www.padippakam.com


மான ஆசாபாசங்களாலும் உங்களுக்கு ஒருவிதத் தீங்கும் நேராது. கல்மிஷமெதுவும் உங்களை வந்து பற்றிக் கொள்ள முடியாது.

உங்களுக்கு விளக்கிச் சொல்லப்பட்ட பல சடங்குகளையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எளிதானதாகத் தோன்றும் மதுபர்க்கா என்ற சடங்கைச் சிறிது கவனியுங்கள். உலக முழுதுமே இனிமையான மது. இனிய அமுதம் நிறைந்திருக்கிறது. உலகத்தில் உங்களைத் தவிர பாக்கி உள்ளவர்களுக்கு உரிய பங்கைக் கொடுத்து விட்டு உங்களுக்கென ஏற்பட்டுள்ள பங்கை எடுத்துக்கொள்வதனால் நீங்கள் அந்த மதுவை அநுபவிக்கலாம். அதன் பொருள் என்னவென்றால், துறவு மனப்பாங்கே இன்பம் பயக்கும் என்பதாம்.

''பிள்ளைப்பேறில் ஆசையில்லாவிட்டால் மணமே செய்து கொள்ளக் கூடாதா?'' என்று மணமகன்களில் ஒருவர் கேட்டார்.

''நிச்சயமாகக் கூடாது. கட்டுப்பாடின்றி நடக்கும் மணங்களில் எனக்கு நம்பிக்கையில்லை. காம வேட்கைக்காகவன்றி பெண்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மணம் செய்து கொள்கிற ஆடவர்களுமுண்டு. இப்படி நடைபெறுகிற மணங்கள் மிக மிக அபூர்வம். பரிசுத்தமான மண வாழ்க்கையைப் பற்றி, நான் எழுதி இருப்பவற்றையெல்லாம் நீங்கள் படித்துப் பாருங்கள். மகாபாரதத்தில் நான் படித்த விஷயம் ஒன்று என் உள்ளத்தில் தினந்தோறும் வேரூன்றி வருகிறது. நியோக முறைப்படி வியாசர் மணம் செய்து கொண்டார் என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது அவர் அழகில்லாது குரூபியாய்த் தோற்றமளித்தாராம். அவருடைய தோற்றம் மிகவும் பயங்கரமாயிருந்ததென்றும், காமலீலை யாதொன்றையும் அவர் செய்யவில்லையென்றும், கலவி செய்வதற்கு முன்பு உடல் முழுதுமே நெய் பூசிக் கொண்டார் என்றும் சொல்லப்பட்



படிப்பகம்

www.padippakam.com



டிருக்கிறது. காம இச்சையைத் தணித்துக் கொள்வதற்காக அன்றி, பிள்ளைப் பேற்றிற்காகவே அவர் கலவி செய்தார். குழந்தை வேண்டுமென்ற ஆசை முற்றும் இயற்கையானது. அந்த ஆசை பூர்த்தியாகிக் குழந்தை பிறந்துவிட்டால், அப்புறம் கலவி என்பதே கூடாது.

முதலில் பிறக்கும் குழந்தையைத் தர்மஜா வென்றும் அதாவது கடமை உணர்ச்சியில் பிறந்த பிள்ளை என்றும்— அதற்குப் பிறகு பிறக்கும் குழந்தையைக் காமஜா என்றும் அதாவது காம இச்சையினால் பிறந்த பிள்ளை என்றும்-மனு சொல்லி இருக்கிறார். கலவி பற்றிய நியதியின் சாராம்சம் இதில் அடங்கி இருக்கிறதெனலாம். நியதி என்பது என்ன? கடவுள் தான். நியதின்படி ஒழுகுவதே கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும். ''இந்த நியதியை எந்த வழியிலும் நான் மீற மாட்டேன்'' என்று நீங்கள் மூன்று முறை திரும்பச் சொன்னீர்கள். இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நியதிக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஆடவரும் பெண் டிரும் சொற்பமாய் இருப்பினும் பாதகமில்லை; உண்மை யான திடகாத்திரமுள்ள ஆடவரையும் பெண்டிரையும் பெற்றுவிடலாம்.

காம இச்சையோடு கஸ்துரிபாயை நோக்குவதை விட்டொழித்த பிறகே, மண வாழ்க்கையை நான் உண்மை யாக அநுபவித்தேன் என்பதை நீங்கள் நினைவில் வைத் துக்கொள்ளுங்கள். இளமை ரத்தம் எனது உடலில் துடி துடித்துக் கொண்டிருந்த காலத்தில் தான் சாதாரணமாய் மண வாழ்க்கை என்றால் என்ன அர்த்தம் கொள்ளுகிறார் களோ அதை அநுபவிக்கக் கூடிய அளவு வாலிபனாயிருந்த சமயத்தில் தான், பிரமசரிய விரதத்தை நான் மேற்கொண் டேன். நாமெல்லோருமே ஒரு புனிதமான கைங்கரியத்தை நிறைவேற்றும் பொருட்டே பிறந்திருக்கிறோம் என்ற உண்மை ஒரு நாள் திடீரென்று என் மனதில் உதித்தது. நான் மணம் செய்து கொண்ட காலத்தில், இந்த எண்ணம்



படிப்பகம்

www.padippakam.com



எனக்கு இருந்ததில்லை. சரியான அறிவு பிறந்த பிறகு, ஒரு கைங்கரியத்தைச் செய்து முடிக்கும் பொருட்டே பிறந்துள்ளேன் என்பதும் மணம் செய்து கொள்வது அந்தக் கைங்கரியத்திற்கு உதவி புரிவதாய் இருக்கிறதென்றும் உணர்ந்து கொண்டேன். அதன் பிறகே உண்மையான தர்மத்தை நான் உணர்ந்தேன் எனலாம். இப்படிப் பிரதிக்ஞை செய்து கொண்ட பிறகு வாழ்க்கையில் உண்மையான ஆனந்தம் பிறந்தது. கஸ்துரிபாய் தோற்றத்தில் மெலிந்திருப்பினும், நல்ல தேகக் கட்டு வாய்ந்தவள். காலையிலிருந்து இரவு வரை பாடுபட்டு உழைப்பாள். என்னுடைய காம இச்சைக்கு இலக்காகி இருந்திருப்பாளேயானால், அவளால் இவ்வளவு தூரம் பாடுபட முடியாது.

இப்படி இருந்தும், காலங்கடந்தே நான் விழிப்படைந்தேன். மண வாழ்க்கையைச் சில ஆண்டுகள் நான் நடத்தி இருக்கிறேன். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள் சரியான காலத்தில் உங்களால் விழிப்படைய முடியும். நான் கலியாணம் செய்து கொண்ட காலத்தில் நிலைமை மிகவும் மோசமாய் இருந்தது. ஆனால், உங்களுக்கோ இப்போது கால நிலை ஒத்ததாய் இருக்கிறது. ஒன்று மட்டும் எனக்குப் பாதுகாப்பாய் இருந்தது; அதைக் கொண்டு நான் கரையேறி விட்டேன். உண்மைதான் அந்தப் பாதுகாப்பு. என்னை அபாயத்திலிருந்து விலக்கி, பாதுகாத்தது அது தான். எனது வாழ்க்கைக்கு அடிப்படையாய் இருந்தது உண்மை தான். பிறகே, உண்மையிலிருந்து அஹிம்சையும் பிரம சரியமும் தோன்றின. ஆகையால், எதைச் செய்யினும் உள்ளத்தில் உண்மையோடு செய்யுங்கள். உலகத்திற்கும் உங்களுக்கும் உண்மையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் எண்ணங்களை ஒளிக்காதீர்கள். எண்ணத்தை வெளியே சொல்வது கேவலம் என்றால், அதை எண்ணுவது இன்னும் கேவலமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# மனைவியின் லட்சியம்

3

தாகூர்

படிப்பகம்

www.padippakam.com

# மனைவியின் லட்சியம்

"...என்னை விட வயசில் நீ எவ்வளவோ சிறியவள்; உலக விஷயமும் ஓர் அளவுதான் தெரியும்; அதோடு ஒரு விஷயத்தில் என்னைவிட அடங்கிப் போகிற சாந்த சுபாவம் உனக்கு; பொறுத்துக் கொண்டு போகிற சக்தியும் உண்டு; அதனால் எந்தவிதமான கஷ்டமாயிருந்தாலும் மனசை சமாளித்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பமே அதிகமாக இல்லை உனக்கு. ஆனால், எல்லோருடைய வாழ்நாளிலும் பெரிய பெரிய சங்கடங்கள் எப்போதாவது ஒரு சமயம் வந்துதான் தீரும்; அப்போது பொறுமையும் சரி, சந்தோஷமும் சரி நிச்சயமாக வேண்டித்தான் இருக்கிறது. அப்போது யோசித்துப் பார்த்தால், "பிரதிதினமும் நேருகிற சின்னஞ்சிறு குற்றங்குறைகள் கஷ்ட நிஷ்டூரங்கள் வேதனையெல்லாம் பார்த்து அப்படி மனங்குன்றிப் போகிறோம்; இப்போது அதெல்லாம் காணோமே" என்று தான் தோன்றுகிறது. உன்மேல் ஆசையாகத்தான் இருக்கிறேன். இன்னமும் அதிக ஆசையாகவும் இருக்கப் பார்க்கிறேன். பரஸ்பரம் உள்ள கடமைகளைப் பூர்ண திருப்தியோடு சந்தோஷமாகச் செய்யப் பிரயத்தனப்படுகிறேன். அப்புறம் நடக்கிறது நடக்கட்டும்; அதிக நாள் என்னவோ யாரும் வாழப்போகிறதில்லை; சுக துக்கமும் நிரந்தரம் அல்ல; அவைகளும் மாறிக் கொண்டேதான் இருக்கும். சுயநலம், குற்றம் குறைகள், வஞ்சனை எல்லா



படிப்பகம்

www.padippakam.com



வற்றையும் லேசாகச் சகித்துக் கொண்டு போவது சிரமந் தான். ஆனாலும் அப்படிப் போகாவிட்டால் உலகத்தில் இருப்பதே பெரும் பாரமாய் வரவர சகிக்க முடியாமல் ஆகி விடும். மனசில் இருக்கும் உன்னத லட்சியம் அப்படியே நிலைத்து இருக்க வேண்டும் என்பதும் கைகூடாமல் போய் விடும். இப்படியே ஒவ்வொரு நாளும் கவலையும் வெறுப்பும் தட்ட தட்ட ஏதாவது சின்ன விஷயமாயிருந்தால் கூட அடிக்கடி சச்சரவு ஏற்பட்டுக் கொண்டேதான் போகும். வாழ்க்கையே வீணாகி விடும். பேரமைதி, பரந்த வைராக் கியம், தன்னலம் பாராட்டாத அன்பு, நிஷ்காம கர்மம் இவை இருந்தால்தான் வாழ்க்கை பயனுடையதாகும். உன் மனசுக்குள்ளேயே சாந்தி ஏற்பட்டால் சுற்றி இருக்கிறவர் களுக்கும் அதனால் ஆறுதல் ஏற்படும். ராணி என்ன? அவளைவிட ஒருபடி மேலேயேதான் இருப்பாய். மனம் போகிற போக்கில் விட்டு விட்டு சதா வெறுப்புத் தட்டிக் கொண்டே போனால் ஒன்றும் உருப்படாது இதில் முக்கால் வாசி நாமாகவே தூக்கிப்போட்டுக் கொள்கிற துன்பந்தான். ஏதோ பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லி பிர சங்கம் பண்ணுகிறேனே என்று என் மேல் கோபித்துக் கொள்ளாதே. இதெல்லாம் எவ்வளவு உள்ளூறச் சொல் கிறேன், என்று உனக்குத் தெரியாது! உன் பேரில் உள்ள அன்பு, சிரத்தை, உன்னோடு ஒத்துழைக்க வேண் டும் என்கிற உறுதி எல்லாம் வரவர அதிகமாகிக் கொண்டே வருகின்றன. நிர்மலமான சாந்தியும் இன்பமுமே இந்த சம்சாரத்தில் எல்லாவற்றையும்விட மேலானவை. அவற் றுக்கு எதிரே மற்றத் துன்பமோ ஏமாற்றமோ எல்லாம் எந்த மூலை? இந்த எண்ணம் தான் மனசில் தலை தூக்கி நிற் கிறது. இப்போதெல்லாம் சிறுவயசில் ஆண் பெண்கள் கூடிக் குலாவுவதில் ஒரு வெறி இருக்கிறது. இதை உன் வாழ்க்கை யில் நீயே உணர்ந்திருக்கலாம். வயது ஏற ஏறத்தான்— சம்சார அலைச்சலில்தான்-ஆண் பெண்களுக்குள் வாஸ்தவ



படிப்பகம்

www.padippakam.com



மான, நிலையான அன்பு ஆழ்ந்து அடங்கின அன்பு உண்டாகிறது. தங்கள் குடும்பம் விருத்தியாக ஆக வெளியுலகு தொலைவில் போய்விடுகிறது. ஒரு விஷயத்துக்கு, சம்சாரம் பெருகப் பெருக அவரவர் குடும்பம் தனி என்று ஆகிவிடுகிறது. ஆண் பெண்களுக்கு உள்ள நெருங்கின சம்பந்தம் இருவரையும் பிணைத்து விடுகிறது. மனித உள்ளம்போல் விசித்திரமானது வேறொன்றும் இல்லை—அதை ஆழ்ந்து கவனித்தால்தான்—அதை நேருக்கு நேர் கண்டு அறிந்தால்தான் உண்மை அன்பு உதயமாகும். அதில் எந்த விதமான மயக்கமும் இல்லை. ஒருவரை ஒருவர் தெய்வம் என்று பாராட்ட வேண்டிய அவசியமும் இல்லை. அப்போது கூடிக் களிப்பதிலும் பிரிந்திருப்பதிலும் வெறியே மூளாது—அதற்கு மாறாக, தூரத்திலும் சமீபத்திலும், ஆபத்து சம்பத்துக்களிலும் ஏழ்மையிலும் ஐசுவரியத்திலும், ஓர் ஆனந்தமே நிலவுகிறது நம் மனத்தில். என்னால் எவ்வளவோ கஷ்டம் உனக்கு; அதுவும் எனக்குத் தெரியும். பின்னால் ஒரு நாள், கஷ்டப்பட்டது யாருக்காக, எனக்காகத்தானே என்று அதில் நீயேகூட சந்தோஷப்படுவாய்! காதலர் ஒருவரை ஒருவர் மன்னித்து ஒருவர் படும் துன்பத்தை மற்றவர் பகிர்ந்து கொள்வதில் இருக்கும் இன்பம், இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதிலும், தம்மையே திருப்தி பண்ணிக்கொள்வதிலும் இல்லை. இப்போதெல்லாம் இதுதான் என் பிரார்த்தனை; சகஜமாகவும் எளிமையாகவும் நாம் வாழ்க்கை நடத்தவேண்டும். நம்மைச் சுற்றிலும் விசால நோக்கமும் சந்தோஷமும் நிலவ வேண்டும். நம் வாழ்க்கை ஆடம்பரமில்லாமல் சுலபமாக நடக்க வேண்டும். அதிகமாக ஆசைப்படாமல், உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து, சுயநலம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும். நம் காரியத்தைவிட தேசத் தொண்டையே பிரதானமாகக் கவனிக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகுட்டிகள் இந்த ஆதர்சத்தை விட்டு நழுவிப்போய் விட்டால்கூட நாம் இருவர் மட்டும் கடைசி வரையில் பரஸ்



படிப்பகம்

www.padippakam.com



பரம் ஒத்துழைக்க வேண்டும். உலகமே வெறுத்துப் போயிருக்கும் ஜீவன்களுக்கு நாம் ஆதரவாயிருந்து வாழ்நாள் இனிது ஈடேற முயல்வோம். இதனால் தான், கல்கத்தாவில் சுயநலமே தாண்டவமாடுகிற அந்தப் பாழும் இடத்திலிருந்து உங்களையெல்லாம் தூரத்திலுள்ள தனிமையான கிராமத்துக்கு அழைத்துக்கொண்டு வந்து விடவேண்டுமென்று அவ்வளவு ஆவலாயிருக்கிறேன். பட்டணத்தில் இருந்தால், இந்தக் குணம் குறைகளையும், தான் பிறர் என்பதையும் மறந்து நிம்மதியாக இருக்கவே முடியாது. அங்கே சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் மனம் குன்றிப்போய்க் கடைசி நாளில் நம் தாராள நோக்கமெல்லாம் மண்ணோடு மண்ணாகப் போக வேண்டியதுதான். இங்கே இருந்தாலோ, அற்பமாக இருந்தாலும் நிறையத் தோன்றும். பொய்யை மெய் என்று நம்பி ஏமாற வேண்டிய அவசியமும் இல்லை. இந்தப் பிரதிக்ஞை மட்டும் எப்போதும் ஞாபகத்தில் இருக்க வேண்டும். அது அவ்வளவு சிரமும் இல்லை. ''இன்பமோ துன்பமோ, அன்போ வெறுப்போ எதுவரினும் அதை மனப் பூர்வமாக ஏற்பவர் வெல்லுதற்கரியராவர்.''

☐

NORWAY ★ SEELAN BOOKS ★ SIGNATURE



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com


# திருமணம்

4

## திரு.வி.க.

படிப்பகம்

www.padippakam.com



# திருமணம்

சொற்பால் அமுதிவள் யான் சுவை
　　என்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத் தெய்வம் தந்தின்று
　　நான் இவளாம் பகுதிப்
பொற்பார் அறிவார் புலியூர்ப்
　　புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்கடி
　　தோட்ட களவகத்தே.

—திருக்கோவையார்.

ஒரு பாதியாய் பெண்ணும் மற்றொரு பாதியாய் ஆணும் ஒன்று படுவது திருமண மென்பது.

மக்களின் இயற்கை அமைப்பை நோக்குழி அவர்கள் தனித்து வாழும் இயல்பினரல்லர் என்பது புலனாகும். மக்கள் கூடி வாழும் இயல்பினரே யாவர். அக்கூட்டை நிகழ்த்துவது திருமணம். திருமணப்பேறு பெறாதார் பிறவிப் பேற்றை இழந்தவராவர்.

மக்கள் ஏன் பிறக்கிறார்கள்? பிறந்து உண்டு களித்து மாண்டு போகவா அவர்கள் பிறக்கிறார்கள்? ஒருவரோ டொருவர் கூடி வாழ்ந்து, அன்பைப் பெற்று, அவ்வன்பைப் பிற உயிர்களும் பெறத் துணை நின்று, முடிவில் இன்ப நிலை



படிப்பகம்

www.padippakam.com



எய்துவது மக்கட் பிறவியின் நோக்கம். இந்நோக்கம் திருமண மின்றி எங்ஙனம் நிறைவேறுதல் கூடும்?

திருமணம் என்பதும் வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் ஒன்றி, முழுத்தன்மை எய்திக் கடனாற்றுதற்கு, அவைகளை அன்புக்கயிற்றால் இயற்கை பிணிப்பது திருமணம். இப் பிணிப்புக் கென்றே இருவரையும் இயற்கை பாதிப் பாதியாகத் தோற்றுவிக்கிறது. அவ்வப் பாதி நிலை இருவரும் பின்னைக் கூடி வாழ்வதற்கு வேண்டப்படும் ஒழுங்குகளைப் பண்படுத்தற்கு உரியதாவது. இருவர் அறிவும் மனமும் ஏனைய உறுப்புக்களும் தனித்தனியே பண்பட்டதும், இயற்கை, திருமண வாயிலாக, அவர் தம் இருமை முழுமை, பிறவி நோக்கை நிறைவேற்றுவதாகும்.

'திருமணம் இருபாதியை எங்கே கெடுக்கிறது? பெண் ஆண் உடல்கள் ஒன்று படுகின்றனவா? இருவர் உடலங் களும் வெவ்வேறாக அல்லவோ விளங்குகின்றன' என்று கருதுவோரும் இருப்பர். ஈண்டு ஒற்றுமை என்றது அன்பின் ஒருமைப்பாட்டை என்க. பெண்மகள் என்பவளும் உடல் அல்லள்; ஆண்மகன் என்பவனும் உடல் அல்லன். உடல் மக்களின் உறையுள். உடலே மக்களன்று. உடலுக்குள்ளே ஒரு நுண்மை இருக்கிறது. அஃது ஆன்மநேய ஒருமைப்பாடு என்பது. அந்நுண்மை விளங்கப் பெறவே மக்கள் இளமையில் கல்வி பயில்கிறார்கள். அந்நுண்மை யாண்டும் விளங்குவதை முதல் முதல் மக்கள் கலையளவில் உணர்கிறார்கள். அதைப் பின்னை அநுபவத்திற் பெறுவிப்பது திருமணம்.

திருமணம் என்பது ஒரு பொழுது தோன்றி, மற்றொரு பொழுது அழிவதன்று. அஃது இம்மை மறுமை வரை தொடர்ந்து நிற்பது. 'ஆயிரங் காலத்துப் பயிர்' என்று நம்மவர் சொல்வதுண்டு. அத்தகைய ஒன்றை விளையாட் டாகவா கருதுவது? மக்கள் பிறப்பதும் வாழ்வதும் படிப்பதும்



படிப்பகம்

www.padippakam.com



உழைப்பதும் உண்பதும் எற்றுக்கு? திருமண வாழ்விற் கன்றோ? அத்திருமண நிலை குன்றின் உலகில் என்ன வளரும்? என்ன ஓங்கும்? தற்செயலாகச் சில இடங்களில் சில நன்மணங்கள் கூடி விடுகின்றன. பல திருமணங்கள் பெரும் போராட்டமாக முடிகின்றன. தலைவனைத் தலைவியும் தலைவியைத் தலைவனும் நீதி மன்றங்களில் ஏற்றும் 'திரு மணங்கள்' திருமணங்களா என்று கேட்கிறேன். திருமண நிலை மிக இழிவு எய்தியிருக்கிறது ஆதலால், திருமணத்தின் மீது மக்கள் பெருங்கவலை செலுத்துவார்களாக.

## காதல்

திருமணத்தால் பெறும் வாழ்க்கையை இறையுடன் இயைந்த இன்ப வாழ்வாக்குதல் எங்ஙனம்? அதற்குரிய முறைகள் என்னென்ன? விரிவஞ்சி மிகச் சுருக்கமாக சில பகர்ந்து மேலே செல்கிறேன்.

முதலாவது இருவர்பாலும் காதல் நிலவுதல் வேண்டும். காதல் பெருநிலை கூட்டும். காதலாவது தலைவி தலைவர்க் குள் நிகழும் கடவுள் அன்பு. தலைவி, தலைவனைக் கடவு ளாகக் கோடலும், தலைவன் தலைவியைக் கடவுளாகக் கோடலும் காதலாகும். கடவுளாவது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. தலைவியும் தலைவனும் தாம் விரும்பும் பொருள்களுள் தம்மோடு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் தாமன்றிப் பிறிதொன்றைக் காணாத ஒரு பெரும் நிலை காதல். இக்காதலால் விழுங்கப்பெற்ற தலைவிக்குத் தலை வனிலும் கடந்த பொருள் ஒன்று தோன்றாது. அவ்வாறே தலைவனுக்குத் தலைவியினும் கடந்த பொருள் ஒன்று புலனாகாது. இந்நிலை பெறுவோர்க்குக் கூடா ஒழுக்கம் இயல்பில் நிகழாது, இக்காதல் நிலை எய்தாதார் காம வயப் பட்டு வாழ்வைக் குலைத்துக் கொள்வர். ஆகவே தலைவி தலைவர் வாழ்வு, காதல் வழி இயங்குவதாயிருத்தல் வேண்டும். காமத்தின் வழி அவ்வாழ்வு இயங்குதலாகாது.



படிப்பகம்

www.padippakam.com



காதல் என்னை? காமம் என்னை? இரண்டுக்கும் வேற்றுமை உண்டோ? உண்டு. காதல் ஓரிடத்தில் படிந்த வேட்கை. அத்தகைய வேட்கை பிறிதொன்றில் நிகழாது. காமம் பல இடங்களில் தோன்றும் விருப்பம். காதல் மாறாதது; காமம் மாறுவது. காதல் கடவுள்; காமம் பேய். காதல் இன்பம்; காமம் துன்பம். காதல் அன்பென்னுந் தன்மையினின்றும் பிறப்பது; காமம் அவாவென்னும் வெம்மையினின்றும் பிறப்பது. காதல், உடலை வளர்க்கும்; காமம் உடலை எரிக்கும். காதல், உடல்-மனம்-அறிவு-என்னும் மூன்றினும் ஊடுருவிப்பாய்ந்து நிலைத்து நிற்கும்; காமம் உடலளவில் எழுந்து வீழ்ந்துபடும். காதல் நாளுக்கு நாள் பெருகுந் தன்மையது; காமம் நாளுக்கு நாள் அருகுந் தன்மையது.

'காதலென்ன காமமென்ன எல்லாங் கலவிதானே' என்று சொல்வோருமுளர். அன்னார் காதற்றன்மையுணராதாரென்க. திருமணம், வெறும் பெண் ஆண் சேர்க்கையை மட்டும் குறிக்கொண்டு நிற்பதன்று. அதனுடன் வேறு பல வாழ்வுத் துறைகளையும் அது குறிக்கொண்டு நிற்கிறது. அவையெல்லாம் சேர்ந்த ஒன்று காதல் வாழ்வு.

'கலவிக் கென்றே பெண் படைக்கப்பட்டாள்' என்று கருதுவது மடமை. தாய்மை என்னும் ஒரு வாழ்வு பெற்று, எல்லா உயிர்களிடத்தும் அத்தாயன்பு செலுத்திக் கடவுள் நிலை பெறுவதற்குப் பெண் பிறந்தாள். உயிர் நிலை முதலிய மெல்லுறுப்புக்கள் பிள்ளைப் பேற்றிற் கென அமைக்கப் பட்டன என்று கோடல் வேண்டுமேயன்றி அவற்றை வெறுங் கலவிக்கெனக் கோடல் படைப்பு நோக்கை உணர்வதாகாது. பிள்ளைப் பேற்றிற்குக் கலவி ஒரு துணைக்கருவி போன்றது. கலவியிலேயே பெண் வாழ்வு அடங்குகிறது என்று, அக்குறியுடன் ஆண் பெண்ணை நோக்குவதும் அவளோடு வாழ்வதும் நரகக் குழியில் வீழ்வதாகும்.



படிப்பகம்

www.padippakam.com



அங்ஙனம் தன்னை நினைந்து கலவியிலேயே காலங் கழிக்கும் பெண்ணும் தனது பிறவிப் பேற்றை இழந்து துன்புறுவாள். இவ்வாண் பெண் ஈட்டமே காமக் கூட்ட மென்க. பெண் பிறவி ஒரு பெரும் விழுமிய நோக்குடையது. அந்நோக்கு, காதல் வாழ்வால் நிறை வேறும்.

காதலில் கலவி இல்லையோ எனில், உண்டு என்று சொல்ல வேண்டுவதில்லை. காதல் வாழ்வில் கலவி ஒரு சிறு கூறு. காமவாழ்விலோ கலவியே யெல்லாம். அதற்கு மேல் அது செல்வதில்லை. காதலிலோ, கலவி-பிள்ளைப் பேறு-கொலை களவுகள் காமம் பொய் முதலிய இழிவுகளினின்றும் விடுதலை யடைதல்-யான் எனது என்னுஞ் செருக்கறல்-தியாகம் - அன்புடைமை - விருந்தோம்பல் - எவ்வுயிரையும் தன்னைப் போல் பார்த்தல்-பயன் கருதாத் தொண்டு முதலிய அறத்துறைகள் பல அடங்கியிருக்கின்றன. காதற் தலைவன், தலைவி நலன் நாடி வாழ்வன். அங்ஙனே காதற் தலைவியும், தலைவன் நலன் நாடி வாழ்வள். ஒருவர் நோயுறின் மற்றவரும் நோயுற்றாற் போல வருந்துவர். இருவரும் ஓருயிர் ஈருடலென வாழ்வர். அவரது அன்பு, வாழ்வுடன் கலந்து நீண்டு வளர்ந்தே போகும். காமத்தலைவனோ தன்னலனே நாடுவன். காமத் தலைவியும் தன்னலனே நாடி நிற்பள். உடல் நலனோ பொருள் வளனோ சுருங்கின் இவர்க்குள் பிரிவு நேரும். இத்தகைய அன்பில்லாக் காம வாழ்விலா மக்கள் வீழ்வது? சிறுமை! சிறுமை!

உண்மைக்காதலி, தன் காதலனுடைய உடல் நலனோ பிறவோ குன்றினும், அவள் அவனை விட்டுப் பிரியாது, ஒன்றிய அன்பால் தொண்டு செய்வாள். காதலன் உயிர் நீப்பினும் அவனைக் காதலி மறவாள். காதலி உள்ளத் துள்ளே காதலனையன்றி வேறென்ன நிலவும்? உண்மைக் காதலன் இயல்பும் இத்தன்மையதே. காதல் என்பது வெறும்



படிப்பகம்

www.padippakam.com



விளையாட்டன்று. காதல் தன்னலன் நாடாது பிறர் நலன் நாடி உழைக்க எத்தகைய தியாகத்துக்கும் உட்படத் துணிவு ஊட்டும். உண்மைக் காதலுக்கு அறிகுறி இதுவேயாகும். இக்காதல் வழி வளரும் இல் வாழ்க்கை பின்னை எந்நிலை கூட்டும் என்று இயம்பலும் வேண்டுமோ? ஆதலால், மக்கள் காதல் என்னும் தண்மைப் பொழிலிடை வாழ்வு நடாத்த முயல வேண்டுமா? அல்லது காமம் என்னும் எரிவாய் வெம்மையிடை வீழ முயல வேண்டுமா? என்பது உன்னற் பாற்று.

## இன்ப வாழ்வு

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு —வன்றொண்டர்

திருமணத்தின் பின்னர் கூட்டுறவால், வாழ்வு அரும்பு கிறது. இளமையில் இருவரும் 'வாழ்வு வாழ்வு' என்று கற்றும் கேட்டும் வந்ததை இப்பொழுது அவர் நிகழ்ச்சியில் காண்கின்றனர். இல்வாழ்வை இருவரும் ஒழுங்குபட நடாத்திவரின், அன்னார் தம்பாலுள்ள பொறாமை அவா வெகுளி தன்னலம் முதலிய குற்றங்கள் படிப்படியே நீங்கப் பெற்று, அவ்விடத்தில் பொறுமை அடக்கம் அன்பு அருள் தியாகம் முதலிய குணங்களுற்று, அந்தண நிலை எய்துவர். ஆகவே, திருமணங் கூட்டும் வாழ்வை நல்வழியில் நடாத்திப் பேறு பெற வேண்டுவது தலைவி-தலைவர் கடமை.

☐



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காதலின் புகழ்

5

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

## பாரதியார்

படிப்பகம்

www.padippakam.com

# காதலின் புகழ்

காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலைதீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவிதையுண்டாம்;
கான முண்டாம்; சிற்ப முதற் கலைகளுண்டாம்.

ஆதலினாற் காதல் செய்வீர், உலகத்தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்;
காதலினாற் சாகாம லிருத்தல் கூடும்;
கவலைபோம், அதனாலே மரணம் பொய்யாம்.

ஆதி சக்திதனை யுடம்பில் அரனுங் கோத்தான்;
அயன் வாணிதனை நாவில் அமர்த்திக்கொண்டான்
சோதிமணி முகத்தினளைச் செல்வ மெல்லாஞ்
சுரந்தருளும் விழியாளைத் திருவை மார்பில்
மாதவனு மேந்தினான்; வானோர்க் கேனும்
மாதரின்பம் போற்பிறிதோர் இன்பமுண்டோ?
காதல் செயு மனைவியே சக்தி, கண்டீர்
கடவுணிலை அவளாலே யெய்த வேண்டும்.

கொங்கைகளே சிவலிங்கமென்று கூறிக்
கோக்கவிஞன் காளிதாஸனும் பூஜித்தான்;
மங்கைதனைக் காட்டினிலுமுடன் கொண்டேகி
மற்றவட்கா மதிமயங்கிப் பொன்மான் பின்னே
சிங்கநிகர் வீரர்பிரான் தெளிவின்மிக்க



படிப்பகம்

www.padippakam.com

## காதலின் புகழ்

ஸ்ரீதரனுஞ் சென்று பல துன்ப முற்றான்;
இங்கு புவிமிசைக் காவியங்க ளெல்லாம்
இலக்கிய மெல்லாங் காதற்புகழ்ச்சியன்றோ?

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்;
ஊடகத்தே வீட்டிலுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காத லென்றால் உறுமுகின்றார்;

பாடைகட்டி யதைக் கொல்ல வழி செய்கின்றார்;
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறை தவறி யிடரெய்திக் கெடுகின்றாரே.

காதலிலே யின்பமெய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போ ரெண்ணுவாரோ?
மாதருடன் மனமொன்றி மயங்கிவிட்டால்
மந்திரிமார் போர்த்தொழிலை மனங்கொள்வாரோ?

பாதிநடுக்கலவியிலே காதல் பேசிப்
பகலெல்லா மிரவெல்லாங் குருவிபோலே
காதலிலே மாதருடன் களித்து வாழ்ந்தால்
படைத்தலைவர் போர்த்தொழிலைக் கருதுவாரோ?

## பெண்மை

பெண்மை வாழ்கவென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்க வென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதியென்ற நாமமும்.

அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்.
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா
சூரப்பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்.



படிப்பகம்

www.padippakam.com



வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்து நின்றாடுவோம்.

பெண்ணறத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணுமாயிற் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடுவோமடா

சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங்கொட்டித் திசைகளதிரவே
ஓத்தி யல் வதோர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்து நின் றாடுவோம்

உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக்குயிரா இன்ப மாகிடும்
உயிரி னுமிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள், ஆடு களிகொண்டே.

'போற்றி' தாய் என்று தோள் கொட்டியாடுவீர்
புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே.

'போற்றி' தாய் என்று தாளங்கள் கொட்டடா
'போற்றி' தாய் என்று பொற்குழலூதடா
காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

அன்னமூட்டிய தெய்வமணிக் கையின்
ஆணைகாட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத்தே முத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கைத் துணை

6

## திருவள்ளுவர்

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கைத் துணை

## இல் வாழ்க்கை

மனைவி மக்களோடு வாழ்பவன் உறவினர், நண்பர், எளியவர் ஆகிய மூன்று வகையினருக்கு உதவியாக இருப்பான். (41)

துறவிகளுக்கும், பசித்திருப்பவருக்கும், நிலைகெட்டவருக்கும் குடும்பத்தில் வாழ்பவனே துணையாக இருப்பான். (42)

மூதாதையர், குலதெய்வம், உறவினர், விருந்தினர், வீட்டில் உள்ளவர் ஆகியோரை ஆதரிப்பது குடும்பத்தில் வாழ்பவன் கடமை. (43)

நல்ல வழியில் சம்பாதித்து, முன்சொன்னபடி எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்பவனுடைய சந்ததிக்கு, ஒரு நாளும் குறைவு இல்லை. (44)

அன்பும், அறமும் உடையதாக குடும்ப வாழ்க்கை இருக்குமானால், அதுவே பண்பும், பயனும் பொருந்தியது ஆகும். (45)

தருமத்தின் முறையோடு குடும்ப வாழ்க்கை நடத்துபவன் ஆனால், அவன் வேறு முறையில் சென்று, பெற வேண்டியது என்ன இருக்கிறது? (46)



படிப்பகம்

www.padippakam.com



அறத்தின் இயல்போடு குடும்ப வாழ்க்கை வாழ்கின்றவன், மற்ற முயற்சி செய்கிற எல்லோரையும் விட மேன்மையானவன். (47)

தருமத்தோடு குடும்ப வாழ்க்கை நடத்தி, மற்றவரையும் நல்ல வழியில் செலுத்துபவன் வாழ்வு, தவத்தை விடச் சிறந்தது. (48)

தருமம் என்று உயர்வாகக் கூறுவது, குடும்ப வாழ்க்கையே. அதுவும், மற்றவன் பழிக்காமல் இருந்தால், நன்மை ஆகும். (49)

உலகில், வாழும் முறைப்படி வாழ்கின்றவன், வானத்தில் உள்ள தெய்வத்தில் ஒருவனாகக் கருதி மதிக்கப்படுவான். (50)

## வாழ்க்கைத் துணை

குடும்பத்துக்குப் பெருமை ஏற்பட, கணவனுடைய வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்துகின்றவள் நல்ல மனைவி ஆவாள். (51)

மனைவியிடம், பெருமை தரக்கூடிய நல்ல பண்பு இல்லையானால், வேறு எவ்வளவு சிறப்பு இருந்தாலும், அதனால் நன்மை இல்லை. (52)

ஒழுக்கமும், நல்ல குணமும் மனைவியிடம் இருந்தால், அந்த வீட்டில் ஒரு குறையும் இல்லை. அப்படி இல்லாவிடில் பயன் இல்லை. (53)

ஒருவன் பெறுகின்ற செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வம், ஒழுக்கமும், மன உறுதியும் உடைய மனைவியை விட, வேறு என்ன இருக்கிறது? (54)



படிப்பகம்

www.padippakam.com



தெய்வத்தை வணங்காவிட்டாலும், கணவனைப் போற்றி வணங்குகிறவள், கோடை காலத்தில் பெய்யும் மழையைப் போன்றவள். (55)

ஒழுக்கத்தில் தன்னையும், தன் கணவனையும் காத்து, தகுதியான பெருமையையும் போற்றி, உறுதியோடு வாழ்கின்றவளே பெண். (56)

பெண்கள், உறுதியால் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதே சிறப்பான பாதுகாப்பு. வேறு காவல் முறையால் எவ்விதப் பயனும் இல்லை. (57)

கணவனை மதித்துத் தன் கடமையைச் செய்தால், மனைவி சிறப்புமிக்க மேலான உலக வாழ்வைப் பெறுவாள். (58)

மனைவி ஒழுக்கம் இல்லாதவளாக இருந்தால், இகழ்ந்து பேசும் பகைவரின் முன்னே கணவன் சிங்கம்போல் கம்பீரமாகச் செல்ல இயலாது. (59)

மனைவியின் நல்ல பண்பே வாழ்க்கைக்கு நன்மை தரும். நல்ல மக்களைப் பெறுவதே அணிகலம் என்று கூறுவர். (60)



படிப்பகம்

www.padippakam.com

# மனை மலர்

7

## இங்கர்சால்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

படிப்பகம்

www.padippakam.com



# மண மலர்

மனித சமுதாயத்திலே, போற்றற்குரிய புனிதமான அம்சம் திருமணம் ஒன்று தான் என்பதை இங்கே தெளிவு படுத்திச் சொல்ல விரும்புகிறேன். அடுப்பங்கரையின்றி மானிட சமுதாயத்தின் முன்னேற்றமில்லை. சுற்றத்தாரின்றி வாழ்க்கையும் பிரயோசனமுள்ளதாகாது. அநேக நல்ல குடும்பங்கள் சேர்ந்தது தான், ஒரு நல்ல அரசாங்கம். அந்த நல்ல அரசாங்கத்தின் கிளையாய் இருப்பது குடும்பமே. அம்மாதிரி குடும்பத்தைச் சீரழிக்கும் எந்த முயற்சியும் பேய்க் குணம் கொண்டது. திருமண வழக்கத்திலே எனக்கு நம்பிக்கை யுண்டு.

காதலும் திருமணமும் இல்லாமல் வாழ்க்கையில் வெற்றி என்பதே கிடையாது. அகிலமெல்லாம் கட்டி ஆளும் ஓர் புகழ் பெற்ற அரசனாகவிருப்பதைக் காட்டிலும், அன்பு நிறைந்த நெஞ்சமுள்ள ஒரு பெண்ணின் துணைவனாவது மிகவும் சிலாக்கியமானது. அன்புள்ள துணைவன் கிடைப்பதைவிட ஒரு பெண்ணுக்கும் சிலாக்கியமானது வேறு எதுவுமில்லை.

பெண்கள், கேவலமான அடிமைத்தனத்திலிருந்து மணம் செய்து கொள்ளக் கூடிய நிலைமைக்கு வருவதற்கு லட்சக்கணக்கான வருஷங்கள் ஆயின.



படிப்பகம்

www.padippakam.com



உலகத்தில் திகழ்கின்ற எல்லாத் தீமைகளுக்கும் பெண்கள் தான் காரணம் என்று ஒவ்வொரு மதமும் கூறு கின்றன. ஆனால், அம்மாதிரி தீமைகள் நிறைந்த உலகத்தில், என்னால் காதலிக்கப்படுகிற ஒரு பெண்ணுடன் கூடி நான் வசிப்பேனே தவிர, தீமையே புரியாத ஆண்கள் மட்டும் நிறைந்துள்ள தேவலோகமாயினும் தனியே வசிக்க விரும்பவே மாட்டேன்.

நான் படித்த ஒரு புத்தகத்திலுள்ள கருத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றுமில்லாத சூன்யத்திலிருந்து, கடவுள் இந்த உலகத்தையும், அதில் ஒரே ஒரு மனிதனை மட்டும் சிருஷ்டித்தாராம். அந்த மனிதனுக்கு எந்தவிதமான வேலையும் இல்லை. தனிமையை உணர்ந்த அவன் அங்குமிங்கும் அலைந்து திரிந்தான். கவர்ச்சி உண்டாக்கக் கூடிய எந்த விஷயமும் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. செய்தியோ, பத்திரிகைகளோ, அரசியல் கொள்கைகளோ எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. இம்மாதிரி அலைந்து கொண்டிருந்த அவனுக்கு ஒரு பெண் துணையைத் தர வேண்டுமென்று கடவுள் தீர்மானித்தார்.

பிறகு, அந்த மனிதனைத் தூங்கும்படி செய்து அவனுடைய விலா எலும்பு ஒன்றை எடுத்து அதிலிருந்து ஒரு பெண்ணைச் சிருஷ்டித்தார். இதை, நான் நம்புவதாக நீங்கள் நினைக்கக்கூடாது. அந்த ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்தத் தொடங்கினார்கள். ஒரே ஒரு 'காரியம்' மட்டும் அவர்கள் செய்யக் கூடாதென்று கடவுள் தெரிவித்திருந்தார். ஆனால், எதைச் செய்யக் கூடாதென்று தடை செய்யப்பட்டிருந்தார்களோ 'அந்தக் காரிய'த்தை அவர்கள் செய்து விட்டார்கள்.

அவர்களிருவரும் 'அந்தச் செய்கை'யை செய்த நாளிலிருந்து உலகத்தில் தீமைகள் பரவத் தொடங்கின. மரங்களிலே பழம் சரியாக பழுப்பதில்லை. அம்மை,



படிப்பகம்

www.padippakam.com



கக்குவான், இருமல், ஜுரம் முதலியவை உண்டாயின. ரோஜா புஷ்பங்களுக்கு முள்ளும், பாம்புக்கு விஷமும் ஏற்பட்டன. இன்னும் எத்தனையோ தொந்தரவுகள், அப்பொழுதிலிருந்துதான் ஏற்பட்டன.

கடவுளால் நியமிக்கப்பட்ட அந்த நியதி மீறப்பட்டதற்கு அந்தப் பெண்தான் காரணமென்று அந்தக்கதை கூறுகிறது. இதைப் போன்ற, கட்டுக் கதைகள் எல்லா மதங்களிலும் உண்டு.

அன்பு என்பது ஒரு நாட்டுக்கு மட்டும் சொந்தமானதல்ல. பெருந்தன்மை என்பது ஒரு ஜாதிக்கு மட்டும் உரிமையல்ல. அன்பும் கருணையும் நிறைந்த பலர், எல்லா நாடுகளிலும் தோன்றியுள்ளார்கள்.

என்னுடைய அபிப்பிராயத்தில், ஆணும் பெண்ணும் சமமானவர்கள். ஆணுக்கு இருக்கும் எல்லா உரிமைகளும் பெண்ணுக்கும் இருக்கின்றன. இன்னும் அதிகமான ஓர் உரிமையும் பெண்ணுக்கு உண்டு. ஆண்களால், பெண்கள் காப்பாற்றப்பட வேண்டிய உரிமைதான், அது.

''மனைவியைச் சந்தோஷமாக இருக்கும்படி செய்ய வேண்டும். ஒரு ஆடவன் தன்னுடைய சுகத்திற்காக மட்டும் மணம் செய்து கொள்வது தவறு. தான் காதலிக்கும் பெண்ணை 'சந்தோஷப்படும்படி செய்வேன்' என்று சொல்லி ஒரு பெண்ணை மணந்து கொள்பவனே சரியான காரியத்தைச் செய்பவன். தான் சந்தோஷமடையவேண்டுமானால், பிறரைச் சந்தோஷப் படுத்த வேண்டும்.'' இதுதான் என் கொள்கை.

''என் குடும்பத்திற்கு நானே தலைவன்; முதலாளி'' என்று சொல்லும் ஒரு ஆண் மகனை நான் வெறுக்கிறேன். வாலிபர்களான மணமக்கள் இருவர், பால் போன்ற நிலவொளியில் காதல் பேச்சுக்களைப் பேசிக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



போகிறார்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர்கள் திடீரென்று ஓரிடத்தில் நின்று 'நம்மில் யார் எஜமானன் என்பதை இங்கேயே முடிவு செய்ய வேண்டும்' என்று விவாதிக்கத் தொடங்குவார்களானால், அது எவ்வளவு கேவலமாகத் தோன்றுகிறது.

சிடு சிடுத்த முகமுடைய மனிதனையும் நான் வெறுக்கிறேன். ஒரு புருஷன் தன் வீட்டிற்குப் போகும்போது, பிரகாசமுள்ள வெளிச்சம் போல் போக வேண்டும். சிலர், வீட்டுக்குள் நுழையும் போதே 'என் மூளை குழம்பிக் கிடக்கிறது' என்று சோர்வுடன் நுழைவார்கள். இன்னும் சிலர் ஐந்தாவது வார்டுக்கு யாரை கவுன்சிலராக தெரிந்தெடுப்பது என்று யோசித்துக் கொண்டிருப்பார்கள். வேறு சிலர், அரசியலைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பார்கள். மற்றும் சிலர் வியாபார விஷயமான கவலையுடன் வீடு நுழைவார்கள். இதெல்லாம் அவர்களுடைய அறிவுச் சோர்வையே குறிக்கும். தாங்கள் வீட்டுக்குள் நுழைந்தவுடன் வீட்டிலுள்ள அத்தனை பேரும் தங்களுடைய சுகத்தையே கவனிக்க வேண்டுமென்று தான் அவர்கள் விரும்புவார்கள். ஆனால், வீட்டிலே நிலைமையை அவர்களைப் போன்றவர்கள் கவனிப்பதில்லை. ஐந்தாறு குழந்தைகளிருக்கும். அவற்றில், இரண்டு நோய் வாய்ப்பட்டிருக்கும். எல்லாக் குழந்தைகளுக்கும் விளையாட்டுக் காட்டி ஆகாரம் கொடுத்து, பாட்டுப்பாடி தூங்கச் செய்யும் அந்த மாதர் குல மாணிக்கம் தன் சோர்வைக் காட்டிக் கொள்ளாமல் புருஷனுக்கும் பணி விடை செய்ய வேண்டி இருக்கிறது.

இன்னும் சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனைவிமார்களிடம் தங்களுடைய மனதையும் கண்ணியத்தையும் ஒப்படைப்பார்கள். ஆனால் தங்கள் வரவு செலவுக் கணக்கு புத்தகத்தையோ அல்லது ஒரு டாலர் நாணயத்தையோ ஒப்படைக்க மாட்டார்கள். இவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



எந்தப் பொருளை சிறந்ததென்று கருதுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். வீட்டுச் செலவுக்காக உங்களை மனைவி ஒரு டாலர் பணம் கேட்பதாக சற்றே கற்பனை செய்து பாருங்கள். போன வாரம் கொடுத்த பணமெல்லாம் எங்கே போயிற்று? என்று நீங்கள் கேட்பதாகவும், அதற்கு உங்கள் மனைவி உங்கள் எதிரில் நடுங்கி நிற்பதாகவும் நினைத்துப் பாருங்கள்.

பிச்சைக்கார சுபாவமும் கோழைத்தனமும் நிறைந்த ஒரு தாய் வயிற்றிலிருந்து எந்த மாதிரியான குழந்தைகள் பிறக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? இந்த உலகத்தில் உங்களுக்கிருக்கும் ஆஸ்தியெல்லாம் அந்த ஒரு டாலர் தானா? அதனையும் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதா? அப்படியானால், அந்த ஒரு டாலரையும் ஓர் அரசனைப் போல் செலவழியுங்கள். அதனை உலர்ந்து போன சருகு மாதிரியும், நீங்கள் எண்ணிறந்த காடுகளுக்குச் சொந்தக்காரன் மாதிரியும் நினைத்து செலவழியுங்கள். பணத்தை அப்படித்தான் செலவு செய்ய வேண்டும். நான் ஒரு பிச்சைக்காரனாக இருந்தால், என்னிடமுள்ள ஒரு கடைசி நாணயத்தையும் அரசன் மாதிரி செலவழிப்பேனே தவிர, ஒரு அரசனாக இருந்து கொண்டு பிச்சைக்காரன் மாதிரி செலவழிக்க மாட்டேன். என் கையிலிருந்து பணம் போக வேண்டி இருந்தால், அதை தாராளமாகப் போக விடுவேன். இறுக்கிப் பிடித்து கஞ்சத்தனம் செய்யவே மாட்டேன்.

நீங்கள் எதைச் சிறந்ததென்று நினைக்கிறீர்களோ அதை உங்கள் குடும்பத்திற்கு கொடுக்க வேண்டும். பார்வைக்கு லட்சணமாக இருக்க வேண்டுமென்று, நீங்கள் நினைப்பதைப் போலவே, உங்கள் குடும்பத்தினரையும் லட்சணமாக இருக்கும்படி செய்ய வேண்டும். கல்யாண சமயத்தில் மட்டும் நல்ல ஆடை அணிந்து கொண்டால் போதும்; பின்னர் துப்புக் கெட்டவன் போல் அழுக்கான



படிப்பகம்

www.padippakam.com



ஆடைகள் அணிந்திருந்தாலும், மனைவி நேசிக்க வேண்டும் என்ற என்ற எண்ணம் கொண்டவன் அகம்பாவம் பிடித்தவன் என்று தான் சொல்வேன்.

'காதல் தத்துவம், மனைவிமார்களைப் பற்றிய விஷய மெல்லாம், பணக்காரர்களுக்குத் தான் ஏற்றதே யொழிய, ஏழைகளுக்கு ஏற்றதல்ல என்று சிலர் கூறுகிறார்கள். பணக்காரர்களின் மாளிகைகளை விட ஏழைகளின் குடிசை களில் தான் அதிகமான அன்பு இருக்கிறது. அன்பில்லாத ஒரு மாளிகை விலங்குகள்தான் வசிக்க லாயக்கானது. அன்புள்ள குடிசையில் தேவர்களே கூட வசிக்க ஆசைப் படுவார்கள்.

நல்ல சுபாவம் ஒன்று தான் உலகத்திலே மிகவும் மலி வான சரக்கு. அன்பு ஒன்றே, கொடுக்கிறவனுக்கும் வாங்கு கிறவனுக்கும் பத்து மடங்கு அதிகமான லாபத்தைத் தரக் கூடியது. ஒருவன் சந்தோஷமாயிருக்க அவன் பணக் காரனாக இருக்க வேண்டுமென்பதில்லை. பெரிய மனிதனாக வும் இருக்க வேண்டியதில்லை. சந்தோஷமுள்ள மனிதன் எதிலும் வெற்றி பெறுவான். நியாயமாகவும் தாராள சிந் தையுடனும் நடந்து கொள்ள பணமும் பெரியதனமும் அவசியமில்லை.

பணக்காரனாயிருந்தாலும் ஏழையாயிருந்தாலும், மனைவியை, ஒரு சிறந்த மலரைப் போல் பாராட்ட வேண்டும். அப்பொழுது தான் மணவாழ்க்கை மகிழ்ச்சி யினால் நிறையும்.

நீங்கள் எந்தப் பெண்ணை உண்மையில் நேசிக்கிறீர் களோ, அவள் உங்கள் பார்வைக்கு எப்பொழுதும் முது மையே அடைவதில்லை. காலம் அவள் முகத்தில் கோடு களை இடலாம்; திரை விழுமாறு செய்யலாம். ஆனால் நீங்கள் உண்மையில் அவளை நேசிப்பீர்களாயின் உங்களால்



படிப்பகம்

www.padippakam.com



காதலிக்கப்பட்ட முதல் நாளன்று காணப்பட்ட, அதே ரூபத்துடனேயே அவள் எப்பொழுதும் தோற்றமளித்துக் கொண்டிருப்பாள். அப்படியே, பெண்ணுக்கும் தன் புருஷனின் வயோதிகமே புலப்படாது. தன் திருமணத்தின் போது தன் கையைப் பிடித்த அந்த வாலிப உருவமே தான் சதா அவள் கண்களுக்குத் தோன்றும்.

காதல் கொண்ட தம்பதிகள் இருவரும் வாழ்க்கையாகிய பர்வதத்தின் மீது ஏறி, முதுமையடைந்ததும், கீழிறங்கி, தம் பேரப் பிள்ளைகளின் மழலைச் சொற்களை மகிழ்ச்சியுடன் கேட்கிறார்கள்.

வீட்டின் அடுப்பங்கரையிலே—குடும்பத்தின் ஜனநாயக வாழ்விலே -குடும்பக் குடியரசிலே—சுதந்திரம், சமத்துவம், அன்பு நிலவ வேண்டுமென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவன் நான்.



படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கை

8

## டால்ஸ்டாய்

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கை

'**வா**ழ்க்கை' என்பது பிறப்பிலிருந்து மரணம் வரை ஒரு மனிதனுக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளைக் குறிக்கும். நன்மை அடைய வேண்டுமென்ற ஆவலையே, நாம் வாழ்க்கையாக உணர்கிறோம். ஆனால், உணர்ச்சியால் விளக்க முடியாது.

குழந்தை பிறந்து வளரும் போது, அக்குழந்தைக்கு வாழ்க்கையின் சிக்கல்களும் முரண்பாடுகளும் புரியாது. தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களைப் பார்த்துப் பார்த்து நாளடைவில் எல்லாம் பழகிக் கொள்கிறது.

நிறையப் பணமும் உணவும் கிடைக்க வேண்டும்; ஆனால், வேலை குறைவாக இருக்க வேண்டும், அது தான் வாழ்க்கை என்று ஏழைக் குழந்தை தன் பெற்றோர்களைப் போல எண்ணும்.

செல்வம் சேர்க்க வேண்டும்; பட்டம் பதவி பெற வேண்டும்; சந்தோஷமாகக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று தன் பெற்றோரைப் பார்த்து சீமான் வீட்டுக் குழந்தை எண்ணும். ஆக, இந்த இரண்டு குழந்தைகளும் ஒரே நோக்கம் கொண்டு முடிந்தவரை தங்கள் வாழ்க்கையை சுகமாகக் கழிக்க விரும்புகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



பிற்காலத்தில், இவர்களுக்குக் குடும்பங்கள் ஏற்பட்டு பெருகும்போது, உடல் வாழ்வுக்கு தேவையான வசதிகளைப் பெறுவதற்கு அவசரமும் ஆத்திரமும் கொள்கின்றனர். அப்படியும் தாங்கள் விரும்பிய வசதி கிட்டா விட்டால் துன்ப மடைந்து ''வாழ்க்கை ஏன் துன்பமயமாக இருக்கிறது?'' என்று கேட்கின்றனர்.

உடனே சமய வாதிகள் அவர்களுக்கு துணைக்கு வருகின்றனர். ''நீ அனுபவிக்கும் துன்பம் மாறி இன்பமாக வாழ வேண்டும் என்றால், எங்கள் கொள்கைகளை நம்பி அதன்படி சடங்குகளை முறையாக நடத்தி வர வேண்டும்'' என்கிறார்கள்.

தங்களுடைய ஆராய்ச்சித் திறமையைக் கொண்டு விஞ்ஞானிகளும் தங்கள் கருத்தை விளக்குகிறார்கள்; ''பிரபஞ்சத்திலே கிரகங்கள், மனிதர்கள், விலங்கினங்கள் தாவரவர்க்கங்கள் ஆகிய எல்லாவற்றின் வாழ்வும் குறிப்பிட்ட நியதிப்படி தான் நடந்து வருகிறது. அந்த விதிகளை எங்கள் ஆராய்ச்சி மூலம் நிருபிக்க முடியும். ஆனால், வாழ்க்கையைப் பற்றியோ, அதில் விரும்பும் நன்மைகளைப் பற்றியோ மற்றவர்களை விட அதிகமாக எங்களுக்குத் தெரியாது. உயிருள்ள வரையில் நல்ல முறையில் வாழ முயற்சிக்க வேண்டும்'' என்கிறார்கள்.

ஆகவே, சமய வாதிகளிடமும் விஞ்ஞானிகளிடமும் நம் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் வகையில் சந்தேகத்திற்கு இடமில்லாத விடை கிடைப்பதில்லை. எனவே மனிதன் தன் பழைய போக்கிலேயே தன் உணர்ச்சிகளையே வழிகாட்டியாகக் கொண்டு வாழ முயற்சிக்கிறான்.

தூங்கி யெழுந்து மறுபடியும் தூங்கப் போகும் வரையில் மனிதன் எத்தனையோ அலுவல்களில் ஈடுபடுகிறான். அந்த வேலைகளைச் செய்து முடிக்க சமயவாதிகளின் கொள்கைகளோ, விஞ்ஞானிகளின் விளக்கங்களோ



படிப்பகம்

www.padippakam.com



உபயோகப்படுவதே இல்லை. தன்னுடைய பகுத்தறிவின் துணை கொண்டு காரியம் செய்யவும் பயப்படுகிறான். சுலப மான வழியைத் தேடுகிறது மனம். உடனே உதவிக்கு ''வழக்கம்'' —வருகிறது.

வாழ்க்கை என்ன என்பதை அறிந்து கொள்ளு முன்னரே 'வழக்கம்' மக்களை அடிமைப் படுத்திக் கொள் கிறது. காலத்திற்கும் இடத்திற்கும் தக்கபடி எல்லா விஷ யங்களும் செயல்களும் வழக்கம் என்பதில் அடங்கி விடு கிறது.

சீனர்கள் கல்லறைகளில் மெழுகுவர்த்தியை ஏற்று கிறார்கள். முஸ்லீம்கள் கல்லறை இருக்குமிடங்களுக்கு யாத்திரை போகிறார்கள். இந்துக்கள் பிரார்த்தனை செய் கிறார்கள். இவ்வாறு இடங்களையும் சமூகங்களையும் பொறுத்து வழக்கம் மாறுபட்டிருக்கிறது.

உணவு தயாரித்தல், வீட்டில் பண்டங்களை அடுக்கி வைத்தல், கல்வி முறை, பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகிய எல்லாவற்றிலும் வழக்கமே வழி காட்டியாக இருந்து வரு வதைப் பார்க்கிறோம்.

உலகத்தில் ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பார்த்து தாமும் அவர்களைப் போலவே நடந்து வருகிறார்கள், ஏன் அப்படிச் செய்கிறார்கள்? எந்த நோக்கத்தோடு அவ் வழக்கத்தைப் பின்பற்றுகிறார்கள்? என்று கேட்டால், ''எல்லாவற்றையும் அறிந்து கொண்டே'' அவ்விதம் செய்வதாகத் தான் கூறுவார்கள். சுருங்கக் கூறுமிடத்து, வழக்கத்தால் செய்யப்படும் செயல்களே ''கடமைகள்'' என்றும் ''புனிதமான கடமைகள்'' என்றும் வழங்கி வரு கின்றன.

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலோர் பெரியவர்களானதும் தங்களுடைய முன்னோர்களின் வழி



படிப்பகம்

www.padippakam.com



யையே பின் பற்றுகின்றனர். சிலருக்கு மட்டும் பகுத்தறிவு உணர்ச்சி தலை தூக்கும். அச்சமயம் அவர்களுக்கு பழைய வாழ்க்கையின் தொடர்பு அறுபட்டுப் போகிறது. பகுத்தறிவு ஏற்பட்ட பின்னர் தான் 'வாழ்க்கை' ஆரம்பமாவதை அவன் உணர்கிறான். தன் வாழ்க்கையையும் பிறர் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்க பகுத்தறிவு துணை செய்கிறது.

நாம் அறிந்திருப்பதையும் அறிந்து கொள்ளாம லிருப்பதையும் அறிந்து கொள்வதே உண்மையான அறிவு. மற்ற மனிதர்களைப் பற்றி பூர்ணமாகத் தெரிந்து கொள்ள மனிதனால் முடிவதில்லை. ஏனெனில் மக்கள் கோடிக் கணக்கில் இருக்கின்றனர். எனவே, தன்னைப் பற்றி தெரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு மற்றவர்களைப் பற்றி தெரிந்து கொள்ள முடியாது. அதுவும் தன் சொந்த வாழ்க்கை, நன்மை தரும் சாதனங்கள் ஆகியவற்றைத் தவிர, வேறு எதையுமே பூர்ணமாக அறிய முடியாது.

நம்மைக் கொண்டு தான் நாம் பிற பொருள்களை அறிகிறோம். நம்மைப் பற்றி நாம் பெற்றுள்ள அறிவே மற்றவைகளை அறிய உதவுகிறது. ஒவ்வொன்றையும் அதற்குண்டான விதி முறைப்படி அறிந்து கொள்கிறோம். பகுத்தறிவு உணர்ச்சியின் விதிக்கு உட்பட்டு நடக்கும் போது தான் வாழ்க்கையும் உண்டு. இல்லாவிடில் வாழ்க்கை இல்லை. மனிதனிடமுள்ள மிருக இயல்பு அறிவுக்கு அடங்கி நடப்பதே வாழ்க்கை என்ற முறையைத் தவிர, வேறு எந்த வகையிலும் நாம் வாழ்க்கையைப் பற்றி புரிந்து கொள்ள முடியாது.

அறிவுக்கு ஆணவம் அடங்கி நடத்தலே அவ்விதி. ஆணவம் அறிவின் விதிக்கு அடங்கி நடக்க நடக்க, மனிதனுடைய உண்மையான வாழ்க்கை நன்றாக மலர்ந்து பரிமளிக்கும். வாழ்க்கை நன்மையை நாடும். நன்மையை நாடுவதே வாழ்க்கை. உலக அமைப்பில், மனிதன் தனியான



படிப்பகம்

www.padippakam.com



நன்மையை அடைய முடியாது என்பதை பகுத்தறிவினால் உணரலாம். தனி மனிதனின் இன்பம் ஏன் சாத்தியமில்லை?

ஒவ்வொருவரும் தனித் தனியே தன்னுடைய நன்மையை நாடினால் அவர்களிடையே பூசல்கள் ஏற்படும். சுய நலத்திற்காக ஒருவரை யொருவர் எதிர்க்க வேண்டி வரும். அதனால் ஒவ்வொருவரும் தன்னுடைய நன்மைக்காகப் பாடுபடாமல் மற்றவர்கள் நன்மைக்குப் பாடுபடுவதென்று ஏற்பட்டால் பூசலே இராது. மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதால் தான் நாம் உலகில் வாழ முடிகிறது. அவ்வாறே, தனி மனிதன் தன்னைப் பார்க்கிலும் மற்றவர்கள் நன்மையில் நாட்டம் கொண்டால் எல்லோரும் நலமுடன் வாழ முடியும்.

□



படிப்பகம்

www.padippakam.com

# கலியாணம்

9

SEELAN BOOKS NORWAY
SIGNATURE

கல்கி

படிப்பகம்

www.padippakam.com



# கலியாணம்

## சதிபதியும் சமூகமும்

கலியாணம் என்பது, கலியாணம் செய்து கொள்ளும் சதிபதிகளை மட்டும் பொறுத்த பிரத்யேக விஷயம் என்று யாராவது எண்ணியிருந்தீர்களானால், அந்த எண்ணத்தை நாலு அறை கொடுத்து விரட்டி விடுங்கள். அது முழுதும் பிசகான எண்ணம்.

கலியாணம் சதிபதிகளை எவ்வளவு பொறுத்த விஷயமோ, அவ்வளவு சமூகத்தையும் பொறுத்த விஷயம். இந்த சமூக சம்பந்தம் இரண்டு வகையில் ஏற்படுகின்றது :—1. இல் வாழ்க்கையில் சந்தோஷமாயிருக்கும் சதிபதிகள் பெரும் பாலும் இனிய சுபாவமுடையவர்களாயும், வாழ்க்கையில் குதூகலமுடையவர்களாயும், தாராள மனங்கொண்டவர் களாயும் இருப்பார்கள். தனி மனிதர்களுடைய இந்தக் குணங்கள் தான் சமூக முன்னேற்றத்துக்குக் காரணமாயிருக் கின்றன. இல்வாழ்க்கையில் சந்தோஷமற்ற சதிபதிகளோ, கடுகடுத்த சுபாவமும், வாழ்க்கையில் வெறுப்பும், குறுகிய புத்தியும், அசூயையும், துவேஷமும் கொண்டவர்களாயிருப் பார்கள். இத்தகையவர்களால் சமூகத்திற்கு எவ்வளவு தீமையுண்டாகும் என்று சொல்ல வேண்டியதில்லை. 2. கலியாணத்தின் பலனாக குழந்தைகள் ஏற்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



இன்று குழந்தைகளாயிருப்பவர்களே கொஞ்ச நாளைக் கெல்லாம் வளர்ந்து தேசத்தின் பிரஜைகள் ஆகிறார்கள். இதனால் தான் நாகரிக தேசங்களில் எல்லாம் குழந்தை வளர்ப்பில் இராஜாங்கம் அதிக கவனம் செலுத்துகிறது. குழந்தைகளுக்குக் காரணமாயிருப்பது கலியாணமாகையால், கலியாணத்தைப் பற்றி சமூகம் கவலை கொள்வது நியாய மல்லவா?

இந்த இரண்டு காரணங்களாலும், நாகரிகமடைந்த எல்லாத் தேசங்களிலும், கலியாணத்தைப் பற்றிய சட்ட திட்டங்களைச் சமூகம் செய்திருக்கிறது. அந்தச் சட்ட திட்டங்களைச் சுலபமாக அமுல் நடத்துவது சாத்தியமா யிருக்கும் பொருட்டு, அவைகளுக்கு மத சம்பந்தமும் ஏற் படுத்தியிருக்கிறார்கள். அதாவது, கலியாண விதிகள் சாஸ்திரங்களிலும் புகுந்திருக்கின்றன. மந்திரங்கள், சடங்குகள். புரோகிதர்கள் தோன்றினார்கள்.

### விவாக விதிகள்

கலியாணம், பெரிதும் சமூகத்தைப் பாதிக்கும் விஷய மாதலால் அதைப் பற்றிச் சமூக சட்ட திட்டங்கள் செய்வது அவசியந்தான் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் அத்தகைய சட்ட திட்டங்கள் அவ்வப்போது கால நிலைமைக்கேற்ப மாற வேண்டியது அவசியம். ஒரு காலத்திற்குப் பொருத்தமாயிருந்த விதிகள் இன்னொரு காலத்திற்குக் கொஞ்சமும் பொருந்தாமல் இருக்கக் கூடும். உதாரணமாக, முற்காலத்தில் நமது தேசத்தில் கட்டை வண்டிகளில் பிரயாணம் செய்தோம்; அப்போதெல்லாம், மண் ரோடுகளே போதுமானதாயிருந் தன. கொஞ்சம் மேடு பள்ளமா யிருந்தாலும் மோசமில்லை. இப்போது மோட்டார் கார்கள் வந்த பிறகு, அந்தப் பழைய ரோடுகள் உதவுமா? இப்போதோ தார் ரோடுகள்—முடியாமற் போனால் கப்பி ரோடுகளாவது—போட்டுத் தான் ஆக வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



நமது முன்னோர்களே அவ்வப்போது கால நிலைமை களுக்கு ஏற்ப கலியாண விதிகளை மாற்றி வந்தார்கள் என்று அறிகிறோம். இதனால் தான் ஸ்திரீகளின் அந்தஸ்து, கலியாண விதிகள் ஆகியவற்றில் எவ்வளவோ முரண் பாடுகளை நமது சாஸ்திரங்களில் காண நேரிடுகிறது. ''ஸ்திரீகளைத் தெய்வங்களாகப் போற்றுங்கள்'' என்று ஒரு சாஸ்திரம் சொல்கிறது. ''ஸ்திரீகள் பால்யத்தில் தகப்பனாருக்கும், யௌவனத்தில் கணவனுக்கும், முதுமையில் புதல்வனுக்கும் அடங்கி நடக்க வேண்டியது'' என்று இன்னொரு சாஸ்திரம் சொல்லுகிறது. வேதகாலத்தில் பெண்கள் பருவமடைவதற்குமுன் கலியாணம் செய்து கொடுக்கப்படுவதில்லை. நமது விவாகங்களில் சொல்லப் படும் வேத மந்திரங்களே இதற்கு அத்தாட்சியாகும். ஆனால், ஸ்மிருதிகள் பெண்கள் பருவமடைவதற்கு முன் விவாகம் செய்விக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்து கின்றன. இதிகாசங்களிலும் புராணங்களிலும் வரும் அவதார புருஷர்கள், அரசர்கள், முனிவர்கள் முதலியோர் சத்தியம் வீரம் தவம் ஆகிய குணங்களில் ஒற்றுமை காட்டுகிறார்கள். ஆனால் கலியாணம் ஒன்றில் மட்டும் அவர்களுக்குள் இருக்கும் வேற்றுமைகள் அளவிட முடியாமலிருக்கின்றன. ஒருவர் ஏகபத்தினி விரதர்; இன்னொருவர் பதினாயிரம் ஸ்திரீகளின் மணாளர். ஒருவர் காந்தர்வ மணம் புரிகிறார்; இன்னொருவர் ஸ்வயம்வரத்தில் ஜயித்துக் கலியாணம் செய்து கொள்கிறார்; வேறொருவர் கன்னிகாதானம் பெற்றுக் கொள்கிறார். ரிஷிகளிலே சிலர் கடும் பிரம்மச்சாரிகள், சிலர் பல பத்தினிகளை உடையவர்கள்; வேறு சிலர் பரஸ்திரீ களிடம் புதல்வர்களைப் பெறுகிறவர்கள்; இன்னும் சிலர் 'கீழ்' சாதிப் பெண்களை மணந்தவர்கள்.

ஆகவே, கலியாணத்தைப் பற்றிய வரையில் நமது முன்னோர்கள் நமக்கு ஒருமுகமான வழி காட்டவில்லை என்பது நிச்சயம். அவர்களிடமிருந்து இவ் விஷயமாக நாம்



படிப்பகம்

www.padippakam.com



கற்றுக் கொள்ள வேண்டியது ஒன்று உண்டெனில், அது கால நிலைக்கு ஏற்பக் கலியாண விதிகளையும் மாற்ற வேண்டும் என்பதே.

ஆனால், ஒரு விஷயம்; நமது முன்னோர்களின் ஏற்பாடுகளை மாற்றும்போது, ஆழ்ந்து யோசித்து பக்தி சிரத்தையுடன் அவ்வாறு செய்ய வேண்டும். நமது முன்னோர்களுக்கு முட்டாள்-பட்டம் கட்டுவது ஒரு அசட்டுத் தனமே யன்றி வேறில்லை.

விவாகம் சம்பந்தமாக நமது பழைய விதிகளை மாற்றி அமைக்க இப்போது அவசியம் நேர்ந்திருக்கிறதா? அது அவசியமாகும்படியாக நமது சமூக நிலைமையில் என்ன மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று பார்க்கலாம்.

**காரணம் 1.** நமது சமூகத்தில் முன்னெல்லாம் ஏக குடும்ப முறை நிலை பெற்றிருந்தது. இந்த முறையின் கீழ் இளம் தம்பதிகளுக்குள் காதல் வளர்வதற்கு இடம் இருந்தது. இதற்குச் சிறந்த உதாரணமாக ஒரு பழைய கதை உண்டு. ஒரு பையனுக்குக் கலியாணம் ஆயிற்று; மனைவி வீட்டுக்கு வந்தாள். ஆயினும் தாயாரிடம் அவனுக் கிருந்த பயபக்தியினால் மனைவியுடன் பேசுவதற்குக்கூடத் துணிச்சல் ஏற்படுவதில்லை; அதற்குச் சந்தர்ப்பமும் அவனுக்குக் கிடைப்பதில்லை. இப்படிப் பல தினங்கள் சென்றன. ஒரு நாள் இரவு பையன் சற்று நேரம் கழித்து வீட்டிற்கு வந்தான். தாயாருக்கு உடம்பு தள்ளவில்லை. படுத்துக் கொண்டு விட்டாள் ''அப்பா, குதிர் இடுக்கில் சாதம் எடுத்து வைத்திருக்கிறேன். அவளையே போடச் சொல்லிச் சாப்பிடு'' என்றாள். பையன் கிராக்கி பண்ணிக் கொண்டான். ''உன் கையால் போட்டால் தான் அம்மா, எனக்கு வயிறு நிறைந்தாப் போல் இருக்கும்'' என்றான். ''இல்லையடா, அப்பா! இன்று ஒரு நாள் அவள் போடட்டும்; நாளைக் கெல்லாம் நான் போடுகிறேன்'' என்றாள்.



படிப்பகம்

www.padippakam.com



சமையலறையில் சென்று இலையில் உட்கார்ந்தான். எத்தனை நாளைய மானோரதம் இன்று நிறைவேறுகிறது? அதை நன்கு அனுபவிக்க வேண்டாமா? "சாதத்தைக் கையிலேயே போட்டு விடு" என்றான். மனைவி, ஈயச் சட்டியில் மாமியார் எடுத்து வைத்திருந்த பழைய சாதத்தைக் கொண்டு வந்து பிடி பிடியாய் எடுத்து, உள்ளங் கையில் போட்டாள். ஒவ்வொரு பிடியுடனும் அவள் மனைவியின் முகத்தின் அழகையும் சேர்த்து அருந்தினான். வழக்கத்தை விட இரண்டு மடங்கு அதிகம் சாப்பிட்டான். ஈயச் சட்டி காலியாகி விட்டது.

மறுநாள் காலையில் தாயார் எழுந்து எருமை மாட்டுக்குப் பருத்திக் கொட்டை ஊற வைத்திருந்த ஈயச் சட்டியை எடுத்தாள். அது காலியாகி இருக்கவே திடுக்கிட்டாள். இன்னொரு ஈயச் சட்டியைப் பார்த்தாள். அதில் சாதம் அப்படியே இருந்தது. கணவனைத் தனியாகக் கண்ட மகிழ்ச்சியில் அந்த இளம் மனைவி பழையது வைத்திருந்த சட்டிக்குப் பதிலாகப் பருத்திக் கொட்டைச் சட்டியைக் கொண்டு வந்து விட்டாள்! அதே சந்தோஷத்தினால், பையனும் அவ்வளவு பருத்திக் கொட்டையையும் சாப்பிட்டு விட்டான்!

இந்த வேடிக்கைக் கதையில் ஒரு உண்மை அடங்கி யிருக்கிறது. "எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின் கீழ் காதல் வளரும்?" என்பதைப் பற்றி மனோதத்துவ சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். "காதலனும் காதலியும் அடிக்கடி தூர இருந்து ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும்; ஆனால், நெருங்கிப் பழகவோ, பேசவோ அதிக சந்தர்ப்பம் ஏற்படக் கூடாது. இப்படிப்பட்ட நிலைமையிலே தான் காதல் பயிர் அதி துரிதமாக வளரும்" என்பது அவர்களுடைய முடிவு. இப்படிப்பட்ட நிலைமை நம் நாட்டில் ஏக குடும்ப ஏற்பாட்டின் கீழ் இருந்து வந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால், தற்போது, ஏக குடும்ப முறை உடைந்து போய் விட்டது. அநேக காரணங்களினால் தனிக் குடித்தனம் தான் இப்போது விரும்பப் படுகிறது. ஏக குடும்ப முறை இன்னமும் உள்ள இடங்களில் அதில் உள்ள தீமைகள் மட்டும் இருக்கின்றனவே தவிர, நன்மைகள் போய் விட்டன.

பெரியவர்கள் இளைஞர்களிடம் அன்பும் அபிமானமும், இளைஞர்கள் பெரியோர்களிடம் பயபக்தியும் கொண்டவர்களா யிருக்கும் போது தான், ஏக குடும்ப முறை நன்மை பயக்கும். மேனாட்டு நாகரிகம், மேனாட்டுக் கல்வி, வாழ்க்கைப் போராட்டம் முதலிய பல காரணங்களினால், ஏக குடும்ப முறை இப்போது போய் விட்டது. அது போக வேண்டியது நியாயமுந்தான்.

ஆகவே, சமூகத்தில் இந்த மாறுதல் காரணமாக நமது விவாக விதிகளையும் மாற்றி அமைத்தல் அவசியமாகி விட்டது.

**காரணம் 2.** தேசத்தில் ஸ்திரீ சுதந்திர உணர்ச்சி பரவி வருகிறது.

அந்த நாளில், ''புருஷனே தெய்வம்'' என்று ஸ்திரீகள் கொண்டாடினார்கள்.

''நீ தெய்வமானால் நான் தேவி'' என்று புதுமைப் பெண் சொல்கிறாள்.

புருஷன் தாசி வீடே கதியாகக் கிடக்கிறான். மனைவி அவனை மீட்டு வரத் தாசி வீடு செல்கிறாள். அங்கே அந்த தாசியின் வீட்டை விளக்கு மாற்றால் பெருக்கும்படி புருஷன் ஆக்ஞாபிக்கிறான். அதுவே தன்னுடைய பாக்கியம் என்று கருதி மனைவி, வீடு பெருக்குகிறாள்—இது பழைய ஸ்திரீ தர்மம்.



படிப்பகம்

www.padippakam.com



அந்தக் காலம் இப்போது மலையேறி விட்டது. தமிழ் நாட்டு நாடகங்களிலும் டாக்கிகளிலும் தான் கொஞ்சம் தங்கி நிற்கிறது. புதிய ஸ்திரீ தர்மம் அதற்கு முற்றும் மாறானது.

''கற்புநிலை யென்று சொல்ல வந்தார்— இரு
''கட்சிக்கு மஃதைப் பொதுவில் வைப்போம்''

என்பது புதிய ஸ்திரீ தர்மம்.

''புருஷனே தெய்வம், அவனுக்குப் பணி புரிவதே மோக்ஷ சாதனம்'' என்ற கொள்கை இருந்த காலத்தில், நமது விவாக விதிகள் திருப்திகரமாய் இருந்திருக்கலாம். ''ஆணும் பெண்ணும் நிகர், மனைவிக்குக் கடமைகள் இருந்தால் புருஷனுக்கும் கடமைகள் உண்டு'' என்ற கொள்கைகள் மேலோங்கி வரும் இந்நாளில், பழைய விவாக விதிகள் பொருந்துவதில்லை.

**காரணம் 3.** ஆங்கிலக் கல்வியின் பயனாக மேனாட்டு இலக்கியங்களை—முக்கியமாக நாவல்களை—நம் நாட்டார் இப்போது ஏராளமாய்ப் படிக்கிறார்கள். மேனாட்டு நாவல் களைத் தழுவித் தமிழிலும் ஏராளமாக நவீனங்கள் வெளியா கின்றன. இவைகள் எல்லாம் ஒரே காதல் மயமாய் இருக்கின்றன. நாடகங்களிலும் டாக்கிகளிலுமோ சொல்ல வேண்டியதில்லை. இப்படி எங்கே பார்த்தாலும் காதல் மயமாய் இருக்கும்போது, விவாகத்தில் காதலை அநுபவிக்காத ஸ்திரீ புருஷர்கள் வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளுகிறார்கள். இதனால் இல்வாழ்க்கை அவர்களுக்குத் துன்பமாகிறது.

''அங்கே ஒரு பெண் குளத்தில் விழுந்து இறந்தாள்; இங்கே ஒரு பெண் மண்ணெண்ணெயை மேலே ஊற்றிக் கொண்டு நெருப்பு வைத்துக் கொண்டாள்'' என்றெல்லாம் சில சமயம் செய்திகள் படிக்கும்போது நமக்கு நெஞ்சு



படிப்பகம்

www.padippakam.com



திகீரென்கிறது. இதெல்லாம் சமூகத்தின் மனோ நிலைமை மாறுதலுக்கேற்ப விவாக விதிகள் மாறாதிருப்பதன் பலனே தவிர வேறில்லை. கஷ்டப்படுகிறவர்கள் ஸ்திரீகள் மட்டுந் தான் என்று நினைத்தால் பிசகு. ஸ்திரீகள் ஒரு விதத்தில் துன்பப்பட்டால், புருஷர்கள் வேறு விதத்தில் இரட்டிப்புத் துன்பம் அடைகிறார்கள்.

காதல் இல்லாத மண வாழ்க்கையில், ஸ்திரீகள் சமூகக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கிறார்கள். ஆனால் அவ்வளவுக்கு வீட்டிலே புருஷர்கள் மீது கொடுங்கோன்மை செலுத்துகிறார்கள். ஆகவே காதல் இல்லாத குறை ஒன்று, ஸ்திரீகளின் கொடுங்கோன்மை ஒன்று, ஆக இரண்டு துன்பங்கள் புருஷர்களைப் பீடிக்கின்றன.

தேசம் முழுவதிலும் இப்படித் தான் என்று நான் சொல்லவில்லை. சந்தோஷமான இல்வாழ்க்கை நடத்தும் குடும்பங்களே இன்னும் நம் தேசத்தில் பெரும்பான்மையாக இருக்கலாம். ஆனால் அதிருப்தியும் துன்பமும் நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றன வென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

கூடிய சீக்கிரம் நமது விவாக முறையையும் விதிகளையும் தக்கபடி மாற்றி அமைத்தாலொழிய, மேற் சொன்ன அதிருப்தியும் துன்பமும் நாளுக்கு நாள் அதிகமாகி சமூகத்துக்குப் பெரிதும் தீங்கு உண்டாகும் என்று நான் கருதுகிறேன்.

## திருட்டுத் தாலி

தற்சமயம் நமது நாட்டிலுள்ள கலியாண முறைக்குச் சிறந்த உதாரணம் ஒன்றைத் தமிழ் நாடக மேடையில் காணலாம். ''அல்லி அர்ஜுனா'' என்னும் நாடகம் அநேகர் பார்த்திருப்பீர்கள். அதில், அல்லி தூங்கும் போது அர்ஜுனன் திருட்டுத்தனமாக அவள் படுக்கை அறையில் புகுந்து



படிப்பகம்

www.padippakam.com



கழுத்தில் தாலியைக் கட்டி விடுகிறான். (நாடகங்களிலே, தூங்குகிற அல்லி அதற்காக ஏற்கெனவே தன் கழுத்தை ஒழித்துத் தயாராய் வைத்திருப்பாள்!) தாலி எப்போது கட்டியாகி விட்டதோ, அப்போது அர்ச்சுனன் கணவன் தான்; அல்லி மனைவி தான். திருட்டுத் தாலியா யிருந்தால் கூடப் பாதகமில்லை. இந்தத் திருட்டுத் தாலியை ஊர்ஜிதம் செய்வதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் முன் வருகிறார். "தாலி என்னமோ கட்டியாகி விட்டது. எப்படியும் அவன் உன் புருஷன்; ஆகையால் அவன் மேல் காதல் கொண்டு விடு" என்று யுக்தி சொல்லிக் கொடுக்கிறார்.

நமது சமூகத்தில் நடக்கும் கலியாணங்கள் இதே முறையில் தான் நடக்கின்றன. பெண்கள் கழுத்தில்—அவர்களுடைய சம்மதம் கேளாமல்—சில சமயம், அவர்கள் சம்மதம் கொடுப்பதற்குப் பிராயம் வருமுன், தாலி கட்டி விடுகிறார்கள். அப்புறம் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஸ்தானத்தில் மதம் வருகிறது. "அவர் உன் பதி; ஆகையால் அவரிடம் காதல் கொள்" என்று ஆக்ஞாபிக்கிறது.

அல்லியின் கலியாணத்தில் அர்ச்சுனன் அல்லியிடம் காதல் கொண்டிருந்தான்; அந்தக் காதலினால் பைத்தியம் பிடித்து அலைந்தான். அதனால் தான் திருட்டுத் தாலி கட்டவும் உடன்பட்டான். ஆனால், இப்போதைய கலியாணங்களில் அதுவும் கிடையாது. இந்தக் காலத்தில் புருஷர்கள் கலியாணம் செய்து கொள்வது காதல் ததும்பிப் போயன்று. "எத்தனை நாள் பிரம்மசாரியா யிருப்பது?" என்று ஒரு நாள் கலியாணம் செய்துகொண்டு விடுகிறார்கள்.

திருட்டுத் தாலி கட்டப் பெற்ற அல்லி, பின்னர் அர்ச்சுனன் மீது அபாரமான காதல் கொண்டதாகவும், சக்களத்திச் சண்டைகள் கூடப் போட்டதாகவும் கதையில் சொல்லப்படுகிறது. நமது சமூகத்திலும், கலியாணம் ஆன



படிப்பகம்

www.padippakam.com



பின்னர் சில சதிபதிகள் காதலர்களும் ஆகிறார்கள். அது அவர்களுடைய அதிர்ஷ்டம் அவ்வளவுதான். தற்காலத்தில் நமது விவாக முறையும், விவாக விதிகளும் காதல் உண்டாவதற்கோ, காதல் வளர்வதற்கோ அனுகூலமாயில்லை என்பது நிச்சயம்.

"கலியாணம் சரிதான்; ஆனால் காதலாவது மண்ணாங் கட்டியாவது? அது எதற்கு? காதல் இல்லாவிட்டால் என்ன மோசம்?" என்று கேட்கலாம். இதற்குப் பதில் சொல்லுவதற்கு முன் மனிதர்கள் ஏன் கலியாணம் செய்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

## கலியாணம் ஏன்?

புருஷர்களையும் சரி, ஸ்திரீகளையும் சரி, ஒரு பிராயத்திற்குப் பிறகு 'தனிமை' என்னும் துன்பம் பீடிக்கிறது. வாழ்க்கையில் வேறு எல்லாவித சுக சௌக்ரியங்களும் இருந்தாலும், ஏதோ குறை உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ஜீவன் இன்னொரு ஜீவனுடைய கூட்டுறவை நாடுகிறது. புருஷனுக்கு ஸ்திரீயினுடைய சிநேகத்தினாலும், ஸ்திரீக்குப் புருஷனுடைய சிநேகத்தினாலும்தான் இந்தக் குறை தீரும். இது இயற்கை நியதி; கடவுளின் சித்தம். ஒருவனுக்கு இத்தகைய குறை தோன்றா விட்டால், அவன் இயற்கைக்கு மாறுபட்டவன் என்றே தீர்மானிக்கலாம்.

ஜீவன்களுடைய தனிமைத் துன்பத்தைப் போக்கிக் கூட்டுறவின் மகிழ்ச்சியை அவர்களுக்கு அளிப்பதற்காகத் தான் கலியாணம் என்பது ஏற்பட்டது. கலியாணத்தின் இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், சில நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். அவைகளில் முக்கியமானது காதல்.



படிப்பகம்

www.padippakam.com



காதல் என்றால் என்ன? காலஞ் சென்ற ஸ்ரீமான் வ. வே. சு. அய்யர் காதலுக்கு மிகச் சிறந்த விளக்கம் ஒன்றை அளித்திருக்கிறார்:—

கண் எல்லோரையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தைகளை யெல்லாம் கேட்கிறது; வாய் காரியம் இருக்கிறதோ இல்லையோ, பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்ற யாரைப் பார்க்கும்போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை இராவிட்டாலும், அவருடைய வார்த்தையைக் காது தேவாமிருதத்தைப் பருகுவது போலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும்போது வாய் குளறுகிறது; நாக்குக் கெஞ்சுகிறது; இதெல்லாம் காதலின் அடையாளம். ஆனால் இக் காதல் எப்படிப் பிறக்கிறது என்றாலோ, அது தேவ ரகஸியம்—மனிதரால் சொல்ல முடியாது.''

இப்படிப்பட்ட காதலில் தேக தத்துவம், மனோ தத்துவம் இரண்டும் அடங்கியிருக்கிறது. காதலி அல்லது காதலனுடைய ஸ்பர்சத்தினால் எவ்வளவு இன்பம் உண்டா கிறதோ அவ்வளவு இன்பம் அவள் அல்லது அவனைப் பற்றி நினைப்பதிலேயே உண்டாகிறது.

இத்தகைய காதலைக் காரணமாகக் கொண்டு ஏற்படும் கலியாணம்தான் சிரேஷ்டமானதாகும். முன்னமே நான் சொன்னது போல் நம் சமூகத்தில் தற்சமயம் இத்தகைய கலியாணங்கள் நேர்வதற்குரிய நிலைமை இல்லை. ஆகவே, கலியாணத்திற்குப் பிறகேனும் சதிபதிகளுக்குள் அத்தகைய காதல் ஏற்பட்டால், அவர்கள் பாக்கியசாலிகள் தான்.

### முதல் நிபந்தனை—காதல்

மனிதர்களைத் தேவர்களாக்கக் கூடிய சிறந்த உணர்ச்சி களுள் தலை சிறந்தது காதல். வாழ்க்கையில் சிறிது



படிப்பகம்

www.padippakam.com



காலமாவாது அதை அனுபவித்தவர்கள் இனிய சுபாவமும், தாராள மனமும் கொண்டவர்களா யிருப்பார்கள். அந்த உணர்ச்சியை அனுபவித்து அறியாதவர்களோ அசூயையும் துவேஷமும் பொங்கும் உள்ளத்தினராய் எப்போதும் கடுகடுப்பாகவே இருப்பார்கள்.

குடும்பங்களில் சில மாமியார்கள் தங்கள் நாட்டுப் பெண்களை அன்பும் ஆதரவுமாய் நடத்துவதையும், வேறு பலர் நாட்டுப் பெண்களின் வாழ்க்கையே நரகமாகும்படி கொடுமை செய்வதையும் காண்கிறோம். நன்கு ஆராய்ந்து பார்த்தால், அன்பாக நடத்தும் மாமியார் தன் வாழ்க்கையில் காதலை அனுபவித்தவளென்றும், கொடுமைக்கார மாமியார் அவ்வுணர்ச்சியை அறியாதவள் என்றும் தெரிய வரும்.

மனுஷ்யர்களுடைய சுபாவம் முழுவதுமே காதல் உணர்ச்சியினால் மாறுபடுகிறது. அது அவ்வளவு முக்கிய உணர்ச்சியா யிருப்பதனால்தான் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் போன்ற இக்காலத்துப் பேரறிஞர்கள் சிலர், காதலுக்காக மற்ற சட்ட திட்டங்களையெல்லாம் உடைக்கலாமென்றும் கலியாண பந்தம் உள்பட சமூக சமய விதிகளை யெல்லாம் புறக்கணிக்கலாமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இப் போதும் இவ்வாறு சமூக சமய விதிகளைப் புறக்கணித்துச் செல்லும் காதலர்களைப் பற்றி நாம் சில சமயம் கேள்விப் படுகிறோம். அதன் பலனாக அவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆனால், சமூக விதிகள் சரியாக மாற்றி யமைக்கப்படும் போது காதல் அத்தகைய கஷ்டங்களுக்கு உள்ளாக அவசியம் நேராது. காதலில்லாத கலியாணங் களுக்குத் தான் அப்போது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்து வார்கள்.

ஆகவே, இலட்சிய விவாகத்திற்கு முதல் நிபந்தனை காதல். அது மட்டும் போதுமா? கலியாணத்திற்கு முந்தியோ,



படிப்பகம்

www.padippakam.com



பிந்தியோ, காதல் கொண்ட சதிபதிகளின் மண வாழ்க்கை இறுதி வரையில் சந்தோஷமா யிருக்குமா? நிச்சயமில்லை.

காதலில் ஒரே ஒரு குறை உண்டு. அதில் தேக தத்துவமும் கலந்திருக்கும் காரணத்தினால் அது நெடுங் காலம் நீடித்து நிற்பதில்லை. நாளடைவில் அதனுடைய வலிமை குன்றி வருகிறது. அதற்குப் பிறகும் மண வாழ்க்கை சந்தோஷமாய் நடக்க வேண்டுமானால் இன்னும் சில நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும்.

## ஒத்த அறிவு நிலை

புருஷனும் மனைவியும் ஏறக்குறைய ஒத்த அறிவு நிலையில் இருக்க வேண்டும். புருஷன் கம்பனையும், காளிதாஸனையும் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, மனைவி அடுத்த வீட்டுக்காரியின் காதுத் தோட்டையும் கை வளையையுமே ஆராய்ந்து கொண்டிருப்பவளாய் இருந்தால் அவர்களுடைய இல்வாழ்க்கை லட்சிய இல்வாழ்க்கையாக முடியாது.

உலகத்தில் நாம் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம்; எத்தனையோ பேருடன் பழகுகிறோம். ஆனால் சிலரிடம் தான் நமக்கு நட்பு உண்டாகிறது; அவர்களிலும் சிலரிடம் தான் நம்முடைய நட்பு நீடித்து வாழ்க்கை முழுவதும் நிலைத்திருக்கிறது. சற்று யோசித்துப் பார்த்தோமானால், ஒத்த அறிவு நிலையிலுள்ளவர்களிடம் தான் இத்தகைய ஆழ்ந்த சிநேகம் ஏற்பட்டு வளருகிறது என்பதை அறிவோம்.

இளமையில் மிகவும் நெருங்கிய ஆத்ம சிநேகிதர்களாய் இருந்தவர்கள் சில சமயம் பிற்காலத்தில் வேற்று மனிதர்கள் போல் ஆகிவிடுவதையும் காண்கிறோம். இதற்குக் காரணம், அவர்களுடைய அறிவு வளர்ச்சியில் வித்தியாசம் ஏற்பட்டு விட்டதென்பதுதான்.



படிப்பகம்

www.padippakam.com



நீடித்த சிநேகத்திற்கு இன்றியமையாத அம்சம் ஒத்த அறிவு நிலையும் ஒத்த அறிவு வளர்ச்சியுமாகும். இவை இலட்சிய மண வாழ்க்கைக்கும் இன்றியமையாதனவே. இந்த அம்சம் நிறைவேறாத இல்வாழ்க்கை பரிபூர்ணமாகாது.

நம்முடைய சமூகத்தில், தற்சமயம் இந்தப் பெரிய குறை இருந்து வருகிறது. கல்வியறிவில் புருஷர்களுக்கும் ஸ்திரீ களுக்கும் பெரிய ஏற்றத் தாழ்வைக் காண்கிறோம். இந்த ஏற்றத் தாழ்வு நமது நாட்டில் இலட்சிய விவாகத்துக்கும் இலட்சிய இல்வாழ்க்கைக்கும் பெருந்தடையா யிருந்து வருகிறது.

ஆகவே, ஸ்திரீ புருஷர்களுக்குள் அறிவு நிலையிலுள்ள வித்யாசத்தை ஒழித்தல் இலட்சிய விவாகத்துக்கு மிகவும் அவசியம். ஒரு திருப்திகரமான அம்சம் என்னவென்றால், நமது ஸ்திரீகள் ஏட்டுக் கல்வியில் புருஷர்களுக்குப் பின் நிற்கிறார்களென்றாலும், கலை உணர்ச்சியிலும், ரஸிகத் தன்மையிலும் ஏறக்குறைய ஒத்த நிலையில் இருக்கி றார்கள். ஏட்டுக் கல்வியிலுள்ள வித்தியாசத்தை ஒழிப்பது அவ்வளவு கஷ்டமல்ல; கொஞ்சம் பலமான முயற்சி செய்தால் சீக்கிரம் வெற்றி பெறலாம்.

## ஒத்த செல்வ நிலை

சிநேகமாகட்டும், காதல் ஆகட்டும், நீடித்து நிற்பதற்கும் பொருளாதார சமத்துவம் அவசியம். ஒருவரை யொருவர் அண்டிப் பிழைப்பவர்களாக இருக்கக் கூடாது. இரப்பவனுக்கு அன்ன தாதாவிடம் நன்றி யிருக்கலாம்; வேலைக்காரனுக்குப் பட்சமுள்ள எஜமானனிடம் பக்தி விசுவாசம் இருக்கலாம். ஆனால், இத்தகையவர்களுக்குள் சிநேகம் ஏற்படாது.

உலகத்தில் இப்பொழுது அறிஞர்களின் கவனத்தை முக்கியமாகக் கவர்ந்திருக்கும் இரண்டு பிரச்னைகள் பொருளாதாரமும், கலியாணமும் என்று ஆரம்பத்திலேயே



படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிட்டேன். பொருளாதார சீர்திருத்தம் ஏற்பட்டால் விவாக சீர்திருத்தத்துக்கும் அது அனுகூலமாயிருக்கும் என்று கூறினேன். அது எப்படி என்று பார்க்கலாம்.

உலகத்தில் பொது உடைமை தர்மம் நிலைபெறுகிற தென்று வைத்துக் கொள்ளலாம். அப்போது சமூகத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லாருக்கும் தேசத்தில் உற்பத்தியாகும் செல்வத்தில் சமமான பங்கு கிடைக்கும். அப்போது கலியாணத்திலோ, ஸ்திரீ புருஷ சம்பந்தத்திலோ பணம் குறுக்கிடாது. அப்போது கலியாணங்களில் மன்மதன் உண்மையாக ஆட்சி செலுத்துவான்.

இப்போது கலியாணங்களில் மன்மதனுக்கும் பதிலாகப் பணப் பிசாசு தான் ஆட்சி செலுத்துகிறதென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. மாப்பிள்ளை பார்க்கிறவர்கள், ''அவனுக்குப் பணம் எவ்வளவு இருக்கிறது?'' என்று தான் முதலில் கேட்கிறார்கள். பெண் பார்க்கிறவர்கள், ''வரதட்சணை எவ்வளவு கொடுப்பார்கள்?'' என்று முதல் கேள்வி போடுகிறார்கள். இதில் சில ஜாதிகள் விலை கொடுத்துப் பெண் வாங்குவதும் உண்டு. பொதுவாக, நம் நாட்டில் இப்போது பெரிய கலியாணத் தரகர் மிஸ்டர் ரூபாயப்பர் தான். வரதக்ஷிணை வாங்கும் கலியாணங்களில், பெண் வீட்டிலிருந்து எவ்வளவு பறிக்கலாமோ அவ்வளவும் பறிக்க வேண்டுமென்பதே பிள்ளை வீட்டாரின் நோக்கமா யிருக்கிறது. இதனால் இல்வாழ்க்கை பெரும்பாலோர் விஷயத்தில் மனக் கசப்புடனே தொடங்குகிறது.

பொது உடைமை ஏற்பாட்டின் கீழ் சிலருக்கு இதெல்லாம் போய்விடுமல்லவா? அப்போது நாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர்கள் எல்லாருக்கும் நாட்டில் உற்பத்தியாகும் செல்வத்தில் சமமான பங்கு உண்டு. மனிதனும் மனிதனும் சமானம்! அதேபோலும் ஆணும் பெண்ணும் நிகர். ஆகவே, பணத்துக்காகக் கலியாணம் இல்லை. அப்போது ''பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com



பிடித்திருக்கிறதா? பெண் பிடித்திருக்கிறதா?'' என்பது முக்கிய கேள்விகளாயிருக்கும்.

ஆனால் நாம் எவ்வளவு பாடுபட்டால்தான் என்ன? நாளைக்குப் பொது உடைமை ஆட்சி ஏற்படப் போவதில்லை. இன்னும் எத்தனை காலமோ தெரியாது. அது வரையில் கலியாணத்தில் மிஸ்டர் ரூபாயப்பர் குறுக்கிடாமலிருப்பதற்கு வழி உண்டா? உண்டு. அது ஸ்திரீகளுக்குச் சொத்துரிமை அளிப்பதுதான். தகப்பனாருடைய சொத்தில் பிள்ளைகளைப் போல் பெண்களும் சம பங்கு அடைய வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அனந்தம்.

முதலாவது, வரதக்ஷிணைக் கொடுமை ஒழியும். கலியாணங்களில் சொத்து விரயமாகி, குடும்பங்கள் அழிவது நிற்கும். இல்வாழ்க்கையில் ஸ்திரீகளும் புருஷர்களும் சம பதவி வகிப்பார்கள். காதலில் ஆரம்பித்த கலியாணமானாலும் இல்வாழ்க்கை நீடித்துச் சந்தோஷமாய் நடப்பதற்கு இந்தப் பொருளாதார சமத்துவம் அவசியம்.

## ஒத்த உரிமைகள்

நாற்பது நாற்பத்தைந்து வயதுக்கு மேல் ஆன பிறகும், பன்னிரண்டு பதின்மூன்று வயதுப் பெண்களை இரண்டாந் தாரமாக மணப்பவர்கள் நம் நாட்டில் எத்தனையோ பேர். இத்தகைய இரண்டாந்தாரர்க்காரர்களைப் பரிகாசம் செய்யும் கதை ஒன்று உண்டு.

மூன்று மனிதர்களுடைய ஆவிகள் ஒரே சமயத்தில் யமனுடைய சந்நிதானத்தை அடைந்தன. முதல் ஆவி பூலோகத்தில் பிரம்மசாரியாகவே இருந்து இறந்தவனுடையது. அவனைப் பற்றிய விவரம் சித்திரகுப்தன் அறிவித்ததும், யமன், ''இவன் பூலோகத்திலே கஷ்டமே அனுபவியாதவன்; ஆகையால் இவனை இங்கே நரகத்தில் போடு'' என்றான். அடுத்த ஆவி ஒரு கிரஹஸ்தனுடைய து



படிப்பகம்

www.padippakam.com



''ஐயோ, பாவம்! உலகத்திலே கலியாணம் செய்து கொண்டு வெகு கஷ்டப்பட்டிருக்கிறான். இங்கேயாவது சுகமாயிருக்கட்டும், சொர்க்கத்திற்கு அனுப்பு'' என்றான் யமன். இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மூன்றாவது ஆவி, ''யமதர்ம ராஜனே! நான் பூலோகத்தில் இரண்டு தடவை கல்யாணம் செய்து கொண்டு ரொம்பக் கஷ்டங்களை அநுபவித்தவன்'' என்று முறையிட்டது. உடனே யமன் வெகு கோபத்துடன், ''அடே முட்டாள்! ஒரு தடவை கலியாணம் செய்துகொண்டு கஷ்டப்பட்டபின், இரண்டாம் தடவையும் கலியாணம் செய்து கொண்டாயா? இப்படிப்பட்ட மூடனுக்குச் சொர்க்கத்தில் இடம் ஏது? போடு இவனைக் கொடிய நரகத்தில்!'' என்று கட்டளையிட்டான்.

ஆனால் இந்தக் கதை, பரிகாசம், ஒன்றுக்கும் இரண்டாந்தாரக்காரர்கள் பயப்படுவதில்லை. ''என்ன செய்கிறது ஸார்! வீட்டிலே சமையலுக்கு ஒருத்தருமில்லை. எத்தனை நாள் சாப்பாட்டுக்குத் திண்டாடுகிறது?'' என்று கூசாமல் பதில் சொல்வார்கள். மூத்த தாரத்தின் குழந்தைகள் இருந்தால் அவர்கள் மேல் பழியைப் போடுவார்கள்.

இதற்கு விலக்காக நடந்து கொண்ட ஒருவரை எனக்குத் தெரியும். அவர் நல்ல வருமானமுள்ள பெரிய பதவியில் இருந்தவர். அவருக்குச் சுமார் நாற்பது வயதானபோது அவருடைய மனைவியார் ஐந்து குழந்தைகளை விட்டு விட்டுக் காலஞ்சென்றார். உடனே, அவருடைய இஷ்டமித்திரர்கள் அவருடைய கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யத் தொடங்கினார்கள். அவர் அதை ஆட்சேபித்த போது, ''ஐந்து குழந்தைகள் உனக்கு இருக்கின்றனவே! அவற்றை யார் பார்த்துக் கொள்கிறது?'' என்று கேட்டார்கள். ''ஆனால் ஐந்து குழந்தை போதாதென்று ஆறாவது குழந்தை ஒன்றையும் என் கழுத்தில் கட்ட வல்லவா பார்க்கிறீர்கள்?'' என்று மேற்படி பிரமுகர் பதில்



படிப்பகம்

www.padippakam.com



சொல்லவே; அவர்கள் வாயை மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று.

இவரைப் போல் நடந்துகொள்கிறவர்கள் நம் தேசத்தில் ஆயிரத்தில் ஒருவர்தான். முதல் மனைவி இறந்த ஒரு மாதத்திற்குள்ளாக இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டவர்கள் சிலரை எனக்குத் தெரியும். இதற்குச் சமூகத் தடையோ, சாஸ்திரத் தடையோ அணு வளவும் கிடையாது. ஆனால், இதே விஷயத்தில் மனைவியின் நிலை எப்படி இருக்கிறது? கழுத்தில் தாலி ஏறிவிட்டால் தீர்ந்தது. எட்டு வயதில் ஒரு பெண் விதவையானாலும், ஆயுள் பரியந்தம் அவள் விதவைதான். தனக்கு அறிவு வருவதற்கு முன்பே இறந்து போன, முகம்கூட ஞாபகம் இராத புருஷனை நினைத்து அவள் விரதம் இருக்க வேண்டும்!

இது விஷயத்தில் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஒத்த உரிமைகள் வேண்டுமென்றே நன்கு கருதுகிறேன். சாதாரணமாய், ஒரு தடவை இல்வாழ்க்கை சுகத்தை அநுபவித்தவர்கள், அத்துடன் திருப்தியடைந்திருப்பதுதான் நல்லது. முக்கியமாக, குழந்தைகள் இருந்தால், புருஷனாகட்டும் ஸ்திரீயாகட்டும், அவர்களைப் பேணி வளர்ப்பதையே இலட்சியமாகக் கொண்டு, மறு விவாகத்தைப் பற்றி நினையாமலிருப்பதுதான் உசிதம். ஆனால், மிகவும் பால்யத்தில் புருஷனையோ மனைவியையோ இழப்பவர்கள் புனர் விவாகம் செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டும். வயதானவர்களும் காதல் ததும்பிப் போய்க் கலியாணம் செய்து கொள்வதாய் இருந்தால், செய்து கொள்ளட்டும். ஆனால், வீட்டில் சமையலுக்கு ஆள் இல்லை என்று, வயதான புருஷர்கள் இளம் பெண்களைக் கலியாணம் செய்து கொள்வதைக் கட்டாயம் தடுக்க வேண்டும். அப்படிப் பட்டவர்கள் சமையல் பரீட்சையில் தேறிய பரிசாரகர்களைக் கல்யாணம் செய்து கொள்வது உசிதமே தவிர, இளம்



படிப்பகம்

www.padippakam.com



குழந்தைகளின் வாழ்க்கையைப் பாழ் செய்வது மகா பாதகம்.

இரண்டு சிநேகிதர்களுக்குள்ளாகட்டும், சதிபதிகளுக் குள்ளாகட்டும் எக்காரணத்தினாலோ மனங் கசந்து போய் விட்டால் அப்புறம் அவர்களைச் சட்டத்தின் பலத்தினால் பிணைத்து வைப்பது தீமையே பயக்கும். நாளுக்கு நாள் துவேஷமே அதிகமாகும். இதனால் அவர்களுக்கும் தீமை, சமூகத்திற்கும் தீமைதான்.

மேலும், புருஷன் விஷயத்தில், மேற்படி பலவந்தம் அவ்வளவு பயன் தராது. இரண்டாவது கலியாணத்தை வேண்டுமானால் தடுக்கலாம்; தாஸி வீட்டிற்குப் போவதைத் தடுக்க முடியுமா? உலகத்தில் பொதுவுடைமை தர்மம் ஏற்படுகிற வரையில் பணத்திற்காக உடலை விற்கும் துர்ப்பாக்கிய ஸ்திரீகள் சிலர் இருப்பார்கள். மனத்தில் அன்பில்லாதவர்களைப் பலவந்தமாகப் பிணைத்து வைப்பதனால் புண்ணியமுமில்லை; புருஷார்த்தமுமில்லை. இருவரில் ஒருவர் மட்டும் விவாகப் பிரிவினை விரும்பினால் அதற்கு அவர் தக்க காரணம் சொல்லிக் கேட்கவேண்டும்.

விவாகப் பிரிவினையே ஒரு சமூகத்தின் பொது வழக்க மானால் அந்த சமூகம் கேடடையும் என்பது உண்மை. ஆனால் விவாகப் பிரிவினைச் சட்டம் ஏற்பட்ட மாத்திரத்தில் இன்றைய தினம் புருஷனும் மனைவியுமா யிருப்பவர்கள் எல்லாரும் உடனே பிரிவினைக்கு மனுப் போட்டுவிட மாட்டார்கள். ஒரு சமூகத்தின் பழக்க வழக்கங்கள் அவ்வளவு சுலபமாய் மாறுதலடைந்து விடமாட்டா. அபூர்வமாகச் சிலர் தான் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

ஆகவே, விவாகப் பிரிவினைக்குச் சட்டம் இடம் கொடுத்ததனாலேயே சமூகத்தில் விவாகப் பிரிவினை அதிக



படிப்பகம்

www.padippakam.com



மாகி விடாது. அதற்கு மாறாக, அப்படி ஒரு சட்டம் இருக்கும் காரணத்தினால் ஸ்திரீ புருஷர்கள் அதிக மன ஒற்றுமையுடன் வாழ்வார்கள். ஒருவரையொருவர் சந்தோஷப் படுத்துவதில் அவர்களுக்கு அப்போது அதிக சிரத்தை இருக்கும். ரொம்பவும் கொடுமைக்காளானவர்களும், மனங் கசந்து போனவர்களும் தான் விவாகப் பிரிவினை செய்து கொள்வார்கள்.

## குழந்தைகள்

சட்டம் இடங் கொடுத்தாலும் விவாக ரத்துகள் அவ்வளவு சுலபமாய் ஏற்படமாட்டா என்று மேலே கூறினேன். அவ்வாறு விவாகப் பிரிவினையைக் கஷ்டமாக்கும் காரணங்களில் மிகப் பெரியது குழந்தை. கலியாணத்தைப் பற்றியோ இல்வாழ்க்கையைப் பற்றியோ பேசும் போது நாம் குழந்தையைக் கவனிக்காமல் இருக்க முடியாது. நாம் கவனிக்காவிட்டாலும் தங்கள் தொண்டை வலிமை யினாலேயே அவை நம்மைக் கவனிக்கச் செய்யும்.

பெற்றோர்களுக்குக் குழந்தைகளிடம் ஏற்படும் பொது வான பாசம்தான் இல்வாழ்க்கைக்குப் பெரிய பாதுகாப் பாகும். சட்டமுமல்ல, சாஸ்திரமுமல்ல. ஸ்திரீ புருஷர் களுக்குள் ஏற்படும் காதல் அல்லது காமம் மிகவும் வலிமை பொருந்திய உணர்ச்சிதான். ஆனால் அதையும்விட வலிமை பொருந்தியது பெற்றோர்களுக்குக் குழந்தையிடம் பிறக்கும் அன்பு.

இலட்சிய வாழ்க்கைக்குரிய நிபந்தனைகளை மேலே விவரித்திருக்கிறேன். அவை ஒன்றும் தற்சமயம் நமது சமூகத்தில் நடக்கும் கலியாணங்களில் நிறைவேறுவதில்லை. ஆனாலும் முக்கால்வாசிக் குடும்பங்களிலும் சதிபதிகள் ஏறக்குறைய சந்தோஷமான வாழ்க்கை நடத்துவது எப்படி?



படிப்பகம்

www.padippakam.com



குழந்தைகளினால்தான். இல்வாழ்க்கையிலுள்ள மற்றக் குறைகளையெல்லாம் ஒருவாறு மறைந்து போகும்படி செய்வது குழந்தைகளே.

வறுமையுள்ள குடும்பங்களில் குழந்தைகள் அளவுக்கு மிஞ்சிப் போவதனால் துன்பம் உண்டாவது உண்மையே. இதை முன்னிட்டு இக்காலத்தில் கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் இத்தகையவர்கள் மேல் பழிவாங்கும் நோக்கத்துடன் குழந்தைகள் சதி யாலோசனை செய்து கொண்டு பிறக்க மறுத்து விடுகின்றன என்று வைத்துக் கொள்வோம். அப்போது நமது சமூகத்தில் உள்ள சதிபதிகள் 100-க்கு 90 பேருடைய வாழ்க்கை வெறும் பாலை வனமாகவே இருக்கும். கர்ப்பத் தடைப் பிரசாரத்திற்குச் செவி கொடுக்கும் போது அதையும் நீங்கள் கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

## விவாக முறை

இக்காலத்தில் விவாக சீர்திருத்த முயற்சிகள் பல நடக்கின்றன. அவைகளில் ஒன்று கலியாணத்தில் மத சம்பந்தம் இருக்கக் கூடாதென்பதும், மந்திரங்களையும் சடங்குகளையும் ஒழித்து விட வேண்டுமென்பதும். இம் முயற்சி நல்லதென்று நான் நினைக்க வில்லை. மேலே கூறிய இலட்சிய விவாகத்திற்குரிய நிபந்தனைகள் எல்லாம் நிறைவேறுமானால், கலியாணத்தில் மத சம்பந்தமிருப்பது விரும்பத் தக்கதே யாகும். வீண் செலவுகளையும், அர்த்த மற்ற குருட்டு வழக்கங்களையும் நீக்கலாம். ஆனால் விவாகத்திற்கு, மற்ற சாதாரண உலக ஒப்பந்தங்களைப் போலன்றி ஒரு புனிதத் தன்மை இருக்க வேண்டியது அவசியம். இதற்கு தெய்வ சந்நிதானத்தில், பெரியோர்களின் ஆசீர்வாதத்துடனும், வெகு காலமாக வழங்கி உரிமை பெற்ற மந்திரங்களுடனும் விவாகத்தை நடத்துவது உசிதம்.



படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த புரோகிதர்களை உங்களுக்குப் பிடிக்க வில்லையானால் தள்ளி விடுங்கள். ஆனால், விவாகத்தின் புனிதத் தன்மையைக் கெடுக்க வேண்டாம்.

## முடிவுரை

''பஞ்ச்'' பத்திரிகையில் ஒரு சமயம் வெளியான பிர சித்தி பெற்ற விகடத்தைக் கேட்டிருப்பீர்கள்.

'கலியாணம் செய்து கொள்ள உத்தேசித்திருப்பவர் களுக்கு யோசனை' :

''வேண்டாம்'' என்று அதில் பிரசுரமாகி யிருந்தது. என்னுடைய யோசனை இதற்கு நேர்மாறானது. ''காலா காலத்தில் கலியாணம் செய்து கொள்ளுங்கள்'' என்று பெரியோர் சொல்லும் யோசனையை நான் முழு மனத்துடன் ஆதரிக்கிறேன்.

விவாக முறையில் எவ்வளவு குறைபாடுகள் இருந் தாலும், இல்வாழ்க்கை தான் ஜீவர்களுடைய இயற்கை. இல்வாழ்க்கையில் தான் மனிதனுடைய வாழ்வு பூரணமா கிறது. எவ்வளவு குறைபாடுள்ள இல்வாழ்க்கை நடத்திய வர்களானாலும் அதன் மேன்மையையும் உணர்ந்தே யிருப்பார்கள். ஆகையினால் தான், அநேகமாகப் பெற்றோர்கள் எல்லாரும் தங்கள் பிள்ளைகளுக்கு மணம் செய்து வைப்பதில் அவ்வளவு கவலை காட்டுகிறார்கள்.

உங்களில் கலியாணம் ஆகாதவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இலட்சிய இல்வாழ்க்கைக்குரிய நிபந்தனைகளை மேலே விவரித்திருக்கிறேனல்லவா? அவை யெல்லாம் நிறைவேறிய பிறகு தான் கலியாணம் செய்து கொள்வது என்று எண்ணினீர்களானால், பிள்ளை யாரின் கதிதான் நேரும். தற்போதுள்ள நமது சமூக நிலை



படிப்பகம்

www.padippakam.com



மையில் எந்த வரையில் அவை நிறைவேறுவது சாத்தியம் என்று பார்க்க வேண்டும். உலகில் எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட்டு வருவதுபோல், இந்தத் துறையிலும் அபிவிருத்தி ஏற்பட்டுத் தான் வருகிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் நாமும் செய்ய வேண்டும். சமூக விதிகளையும், சர்க்கார் சட்டங்களையும் மாற்றுவதற்கு எல்லாப் பிரயத் தனங்களும் செய்ய வேண்டும். ஆனால், நமது முயற்சிகளின் நலன்களை நமது சந்ததிகள் தான் அநுபவிப்பார்கள்.

சுருங்கச் சொன்னால், சம்சார சாகரத்தில் கண்ணைக் கட்டிக் கொண்டு தொப்பென்று விழ வேண்டாம்; கண்ணைத் திறந்து கொண்டு அதிலுள்ள இன்ப துன்பங்களை யெல்லாம் அநுபவிக்கச் சித்தமாக இறங்குங்கள் என்பது தான் என் யோசனை.

கடைசியாக ஒரு வார்த்தை! மங்களம்.

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

படிப்பகம்

www.padippakam.com

# பாராட்டுரைகள்

O "மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்து விட்ட அவசியமான காதலைப் பற்றியும், கலியாணத்தைப் பற்றியும் அறிஞர் பலர் பல சமயங்களில் கூறியுள்ள அறிவுரைகளின் தொகுப்பே இப்புத்தகம். காலத்திற்கும் கருத்துக்கும் தற்கால வாழ்விற்கும் ஏற்ப காதலும் கலியாணமும் எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி நல்லதொரு விளக்கம் படிப்போருக்குக் கிடைக்கும் வண்ணம் தொகுப்பு கச்சிதமாக அமைந்துள்ளது."

**சுதேசமித்திரன்**

*   *   *

O "...மனித உள்ளங்களை ஆட்டி வைக்கும் காதல் என்னும் அபூர்வமான சக்தியைக் குறித்தும் கலியாணம் என்ற வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயத்தைக் குறித்தும் பல பெரியார்கள் எழுதியுள்ள கட்டுரைகள் இந்தத் தொகுதியில் அடங்கியுள்ளன."

**கல்கி**

*   *   *

O "திருமணப் பரிசுக்கென சேகரம் செய்து புத்தகத்தை வெளியிட்ட பெருமை திரு. முல்லை முத்தையா அவர்களைச் சாரும்."

**குமுதம்**

[முதல் பதிப்பு 1957ம் ஆண்டின் போது வெளிவந்த மதிப்புரைகள்]

*   *   *

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**
**சென்னை-600 098.**

Code No. A 561

ISBN 81-234-0024-1

படிப்பகம்